المكتب التعاوني للدعوة والإرشاد
وتوعية الجاليات بالبديعة
Badeea Islamic Center

# ஸுன்னாவின் ஒளியில் சுவன வழிகள்

## موجبات الجنة في ضوء السنة




تاميلي


تأليف الشيخ الدكتور :
عبدالله بن علي الجعيثن
ترجمة: عبدالرحيم آدم فلي

# ஸுன்னாவின் ஒளியில் சுவன வழிகள்

மூலம்
பேராசிரியர் அப்துல்லாஹ் பின் அலீ அல் ஜுஅய்ஸின்

தமிழில்
அப்துர் ரஹீம் ஆதம் (கபூரி, மதனி)

மேலாய்வு
மௌலவி எம். எம். ஏ. முபாரக் (கபூரி, மதனி)

# موجبات الجنة في ضوء السنة

تأليف: الشيخ الدكتور عبدا لله بن علي الجعيثن

ترجمة: عبد الرحيم آدم فلي

مراجعة: الشيخ محمد مخدوم أحمد مبارك

# ஸுன்னாவின் ஒளியில் சுவன வழிகள்

## மூன்றாம் பதிப்பின் முன்னுரை

அகிலத்தாரின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவன் அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன். அவனின் அடியாரும் திருத் தூதருமாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் கூறுகின்றேன்.

குறிக்கோல்களில் மிக முக்கிய குறிக்கோலாகிய சுவன இன்பத்தை அடையும் வழிகளை உள்ள டக்கியுள்ள இந்நபிமொழிகளை ஒன்று சேர்ப்பதற்கு அல்லாஹ் என் மீது அருள் புரிந்தான். இந்நபி மொழிகளில் விளங்க முடியாதவற்றுக்கு முடியுமான ளவு சுருக்கமாக அடிக்குறிப்பையும் இட்டுள்ளேன். இந்நூல் குறுகியதாக இருப்பினும் இறையருளால் அதிகமான வாசகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. பல பள்ளிகளில் அஸர் தொழுகையின் பின் இந்நூல் வாசிக்கப்பட்டுள்ளது.

உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள இப்பதிப்பில் மீள் பார்வை செய்து, எனக்கு முடியுமானவரை அச்சுப் பிழைகளை திருத்தியுள்ளேன். மேலும் எனக்கு பின்னர் கிடைத்த சில நபி மொழிகளையும் மேலதிகமாக குறிப்பிட்டுள்ளேன். எனவே இப்பதிப்பு

முன்னைய பதிப்பை விட நிறப்பமானதாகவும், மிகச் சரியானதாகவும் இருக்க வேண்டுமென்பது எனது அவா.

இந்நூல் மூலம் இதன் ஆசிரியருக்கும், பிரசுரித்தோருக்கும், இதனை வாசிப்போருக்கும் நற்பயன் அளித்திடுமாறு இறைஞ்சுகிறேன். மேலும் இந்நபி மொழிகள் பொதிந்துள்ள அமல்களைச் செய்வதற்கு அருள் புரியுமாறும், அதில் தூய எண்ணத்தை தந்திடுமாறும் வேண்டுகிறேன். எமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தினர் தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும், ஸலாமும் கூறுவானாக!

பேராசிரியர் · அப்துல்லாஹ் பின் அலீ அல் ஜுஅய்ஸின்
இஸ்லாமிய அழைப்பு வழிகாட்டி மையம் - புரைதா
11-8-1424ஹி

த. பெ. எண்: 281
புரைதா.

# முன்னுரை

நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனைப் புகழ்ந்து, அவனிடம் உதவி தேடி, பிழை பொருக்க வேண்டி, அவனிடம் தவ்பாவும் செய்கி றேன். மேலும் எமது உள்ளங்களின் கெடுதிகளை விட்டும், செயல்களின் கெடுதிகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம். அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டுகின்றானோ அவரை வழி கெடுத்துபவர் எவருமில்லை. மேலும் எவரை வழிகேட்டில் விட்டுவிடுகிறானோ அவரை நேர்வழிப்படுத்துபவர் எவருமில்லை. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை என்றும், அவன் தனித்தவன் அவனுக்கு இனை துனை எவருமில்லை என்றும் சான்று பகர்கிறேன். மேலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனின் அடியாரும், தூதரும் ஆவார்கள் என சான்று பகர்கிறேன்.

இது சுவனத்தில் நுழைவிக்கும் நல்லமல்கள் பற்றி வந்துள்ள நபி மொழிகளின் ஒரு தொகுப்பா கும். எனக்கும், என் இஸ்லாமியச் சகோதரர்களுக் கும் இது பற்றி ஞாபகமூட்டுவதற்காக இந்நபி மொழிகளை இந்நூலில் தொகுத்துள்ளேன். அதற்கு "மூஜிபாதுல் ஜன்னா பீ ழவ்இஸ் ஸுன்னா" எனப்

பெயரிட்டேன். ஏனெனில் சில நபி மொழிகளில் இவ்வாறு வந்துள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உக்பா பின் ஆமிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: யாரொரு முஸ்லிம் முறையாக வுழு செய்து, பின்னர் தனது உள்ளத்தாலும் உடலாலும் தொழுகிறாரோ அவருக்கு சுவனம் நிச்சயமாகி விடுகின்றது.

முன்னுரையில் சில விடயங்களை குறிப்பிட விரும்புகிறேன்:

1- சுவனத்தை நிச்சயிக்கும் நல்லமல்கள் பற்றிய நபி மொழிகளை இந்நூல் குறிப்பிடுகிறது. மேலும் எவர் ஒன்றைச் செய்தால் அவர் சுவனம் நுழைவார், என்றோ அல்லது சுவனத்தில் அவருக்கோர் வீடு, அல்லது மாலிகை கட்டப்படும், அல்லது அவருக்கு சுவன வாயில்கள் திறக்கப்படும், அல்லது சுவனத்தில் ஓர் உயர் அந்தஸ்தைப் பெறுவார், அல்லது அதில் இனிமை ஏற்படுத்தப்படும், அல்லது சுவனத்தில் அவருக்கு ஓர் மரம் நடப்படும் என்று வந்துள்ள நபி மொழிகளையும் இந்நூல் கையால்கிறது.

2- சுவனம் நுழைவதற்கு நல்லமல் காரணமாக இருந்தாலும் ஓர் அடியான் அதனால் மாத்திரம் சுவனம் நுழைய முடியாது.

**நிச்சயமாக அல்லாஹ்வின் அருள் மூலமே நுழைய முடியும் என்பதை இறை மார்க்கம் கூறுகிறது. இதனால் தான் நல்லமல்கள் மூலம் சுவனம் நுழைய முடியும் என்பதை அல்லாஹ் உறுதிப்படுத்துகிறான். "நீங்கள் செய்து கொண்டிருந்த (நற்) கருமங்கள் காரணமாக சுவனபதியில் நுழையுங்கள்" என்று அம்மலக்குகள் சொல்வார்கள். (16:32). மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நல்லமல்க ளால் மாத்திரம் சுவனம் நுழைய முடியாது என்று கூறுகின்றார்கள். எவரையும் அவரின் செயல் சுவனத்தில் நுழைவிக்காது. மற்றொரு சொல்லில் "உங்களில் எவரும் அவரின் செயலால் வெற்றி பெற முடியாது." என்று வந்துள்ளது. (புகாரி 10:127 முஸ்லிம் 4:2169)**

இவ்விறை வசனத்துக்கும் நபி மொழிக்குமிடை யில் இவ்வாறு ஒற்றுமை காணலாம்: செயலால் சுவனம் நுழைய முடியாது என்று நபி மொழியில் கூறப்பட்டிருப்பதன் கருத்து ஒன்றுக்கு மற்றொன்று பகரம் இல்லை என்பதாகும். திருமறை வசனத்தில் உள்ள 'பா' என்ற எழுத்து காரணம் என்ற கருத்துடையதாகும். அதாவது சுவனத்தை அடைவதற்கு செயல் மாத்திரம் இல்லா விட்டாலும்

சுவனம் நுழைவதற்கு அது ஓர் காரணமாகும் என்ற கருத்தை வேண்டி நிற்கிறது.

3- இச்செயல்களுக்கான கூலியை அடைவதற்கு இறை விசுவாசம் முக்கியமானதாகும். இறை விசுவாசமின்றி இச்சசெயல்களில் ஒன்றைச் செய்வதால் மாத்திரம் அதற்கான கூலியை அடைய முடியாது.

4- சுவன அமல்கள் பல வகையாகவும், அதிகமாகவும் இருப்பது அல்லாஹ் அடியானுக்குச் செய்துள்ள கிருபையாகும். இறை விசுவாசிகளில் சிலருக்கு இச்செயல்களில் சிலதை செய்ய முடியுமாகவும் ஏனையவற்றை செய்ய முடியாமலும் இருக்கலாம். ஓர் இறை விசுவாசிக்கு இவற்றில் சிலவற்றைச் செய்வதற்கு அருள்பாலிக்கப்படலாம். பெற்றோருக்கு நல்லுபகாரம் புரிதல், அநாதைகளைப் பராமரித்தல் போன்றவை அவருக்கு இலகுவாக இருக்கலாம். எனினும் இரா வணக்கம் புரிவதும், நபிலான நோன்பு நோற்பதும் அவருக்கு கஷ்டமாக இருக்கலாம். அதே வேளை மற்றொருவர் இதற்கு நேர்மாறாக இருக்கலாம்.

எனவே சகோதரா! உனக்குச் செய்வதற்கு முடியுமான நற்செயலைச் செய்வதற்கு சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வாயாக! அத்துடன் ஏனைய நற்செயல்களைச் செய்வதற்கும் முயற்சிப்பாயாக!.

காலித் பின் மஃதான் அல் கலாஈ அத்தாபிஈ அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களில் ஒருவருக்கு நன்மையின் வாயில் திறக்கப்பட்டால் அவர் அதனை விரைந்து செய்யட்டும். ஏனெனில் எப்போது அவருக்கு அவ்வாயில் மூடப்படும் என்பதை அறிய மாட்டார். (அஹ்மத்: 384).

இறுதியாக பள்ளிக்கு வருவோருக்கு இந்நபி மொழிகளை வாசிக்குமாறு என் சகோதரர்களான பள்ளி இமாம்களிடம் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு நற்பயனைக் கொடுப்பான்.

மேலும் இந்நூல் மூலம் இதன் ஆசிரியருக்கும், வாசகர்களுக்கும், இதனைக் கேட்போருக்கும் நற்பயன் அளித்திடுமாறு இறைஞ்சுகிறேன். நிச்சயமாக அவன் யாவற்றையும் செவியேற்பவன். அழைப்பாளர்களின் அழைப்புக்கு விடையளிப்பவன்.

சகோதரா! உனக்கும், உன் சகோதரனாகிய எனக்கும் பயனுள்ளவற்றைப் பிரார்த்திப்பதற்கு மறந்திடாதே!

வஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

அப்துல்லாஹ் பின் அலீ அல் ஜுஅய்ஸீன்
சட்டக்கல்லாரி
அல் கஸீம்
புரைதா.
த. பெ. எண்: 281.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகின்றேன்)

# நபி வழியில் சுவன வழிகள்

## 1- "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்ற கலிமாவை மொழிந்து அதன் படி செயற்படல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உப்பாதா பின் ஸாமித் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணையில்லை, நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள், மேலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள், அல்லாஹ் அவனின் வார்த்தையை மர்யமிடம் போட்டான். மேலும் அது அல்லாஹ்விடமிருந்துள்ள ஒரு உயிராகும், சுவர்க்கம் சத்தியமானது, நரகம் சத்தியமானது என்று யார் சான்று பகர்கிறாரோ அவரின் நற்கிரிகைக்காக அல்லாஹ் அவரை சுவனத்தில் நுழைவிப்பான். (புகாரி 6:474 முஸ்லிம் 1:57)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூதர் (றழி) அவர்கள் அறிவிக்

கின்றார்கள்: எந்த ஓர் அடியான் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்று கூறி பின்னர் அதே நிலையில் மரணிக்கிறாரோ அவர் சுவனம் நுழையாமலிருப்பதில்லை. என்று நபியவர்கள் கூறிய போது, விபச்சாரம் செய்தாலும், திருடினாலுமா என நான் கேட்டேன். விபச்சாரம் செய்தாலும், திருடினாலும் கூட சுவனம் நுழைவார் என நபியவர்கள் கூறினார்கள். விபச்சாரம் செய்தாலும், திருடினாலுமா என நான் மீண்டும் கேட்டேன். விபச்சாரம் செய்தாலும், திருடினாலும் கூட சுவனம் நுழைவார் என நபியவர்கள் மூன்று முறை கூறி விட்டு நான்காவது முறையாக அபூ தர்ரே விபச்சாரம் செய்தாலும், திருடினாலும் கூட சுவனம் நுழைவார் என நபியவர்கள் கூறினார்கள். (புகாரி 10:283 முஸ்லிம் 1:95).

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் பத்ஹுல் பாரி என்ற தனது நூலில் கூறுகின்றார்கள்: இந்நபி மொழியிலும் இவையல்லாத ஏனைய நபி மொழிகளிலும் வந்திருக்கின்ற "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற சொல் மூலம் நாடப்படுவது (இஸ்லாத்தில் நுழைபவர்) சாட்சி கூறும் இரு வார்த்தைகளாகும். எனவே தூதுத்துவத்தை இதனுடன் சேர்த்து கூறாமல் விடுவதில் பிரச்சினை ஏதும் இல்லை. இப்னுல் முனீர் கூறுகின்றார்: "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற சொல் அல்லாஹ்வை இறைவனாகவும், முஹம்மத் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களை அவனின் தூதராக வும் ஏற்று சாட்சி கூறுவதற்கே புணைப் பெயராக கூறுப்பட்டு வருகிறது. (பத்ஹுல் பாரி: 3:110)

நீண்டதொரு நபி மொழியில் அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபியவர்கள் அபூ ஹுரைராவே என்று என்னை அழைத்து, அண்ணலாரின் இரு பாதணிகளையும் என்னிடம் தந்து விட்டு, இவ்வாறு கூறினார்கள்: எனது இப்பாத ணிகள் இரண்டையும் கொண்டு செல்வீராக! உள்ளத்தால் உறுதிகொண்டவராக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை என்று, சான்று பகர்கின்ற எவரையும் இந்தச் சுவருக்குப் பின் நீர் சந்தித்தால் அவருக்கு சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் கூறுவீராக! (முஸ்லிம் 1:59)

ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! (சுவ னத்தையும், நரகத்தையும்) நிச்சயிக்கும் இரு அம்சங்கள் எவை என்று கேட்டார். அதற்கு நபியவர்கள் "யார் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைக்காமல் மரணிக்கிறாரோ அவர் சுவனம் நுழைவார். மேலும் யார் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைத்தவராக மரணிக்கிறாரோ அவர் நரகம் நுழைவார் ." (முஸ்லிம் 93)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உஸ்மான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குத் தகுதியானவன் வேறு யாரும் இல்லை என்று அறிந்தவராக யார் மரணிக்கிறாரோ அவர் சுவனம் நுழைவார்." (முஸ்லிம் 26)

**2- இறைவனை விசுவாசம் கொண்டு இறைவனுக்கு வழிப்படுவதன் மூலமும், பாவச் செயல்களைத் தவிர்ப்பதன் மூலமும் மார்க்கத்தில் நிலையாயிருத்தல்.**

அல்லாஹ் கூறுகின்றான்: " நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) - நல்ல - செயல்களைச் செய்கிறார்களோ அவர்கள் (விருந்துக்கு) இறங்கும் இடமாக ஃபிர்தவ்ஸ் என்னும் தோட்டங்கள் • இருக்கும். அதில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவர்கள் அதிலிருந்து மாறி (வேறிடம்) செல்ல விரும்பமாட்டார்கள்." (18:107, 108)

"எவர் நம்பிக்கை கொண்டு நற்கருமங்களைச் செய்கிறார்களோ, அவர்கள் சுவர்க்கவாசிகள். அவர்கள் அங்கு என்றென்றும் இருப்பார்கள்." (2:82)

"நிச்சயமாக எவர்கள் "எங்கள் இறைவன் அல்லாஹ்தான்" என்று கூறி, (அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள்பால் மலக்குகள் வந்து, "நீங்கள்

பயப்படாதீர்கள், கவலையும் பட வேண்டாம் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்" (எனக் கூறிய வாறு) இறங்குவார்கள்". (41:30)

"நிச்சயமாக எவர்கள் "எங்கள் இறைவன் அல்லாஹ்வே" என்று கூறி, பிறகு அதிலேயே நிலைத்து நிற்கிறார்களோ அவர்களுக்கு பயமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள். அவர்கள்தாம் சுவர்க்கவாசிகள். அதில் அவர்கள் நன்மை செய்து கொண்டிருந்ததற்குக் கூலியாக அதில் அவர்கள் என்றென்றும் தங்குவார்கள். (46:13, 14)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எனது சமுதாயத்தில் மறுத்த வனைத் தவிர மற்ற அனைவரும் சுவனத்தில் நுழைவார்கள் என நபியவர்கள் கூறிய போது, அல்லாஹ்வின் தூதரே! மறுக்கின்றவன் யார்? என நபித்தோழர்கள் கேட்டார்கள். எனக்கு வழிப்பட்ட வர் சுவனம் நுழைவார். எனக்கு மாறு செய்வதவர் மறுத்தவராவார் என நபியவர்கள் கூறினார்கள்". (புகாரி 13:249)

### 3- இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றுதல்

தல்ஹா பின் உபைதுல்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நஜ்த் பிரதேசத்திலிருந்து ஒரு

மனிதர் தலை விரி கோலமாக நபியவர்களிடம் வந்தார். அவரின் பேச்சின் ஓசை கேட்கிறது. அவர் சொல்வது என்னவென்று விளங்குவதில்லை. அவர் நபியவர்களிடம் நெருக்கமாகச் சென்று இஸ்லாத்தைப் பற்றிக் கேட்ட போது "நாளாந்தம் ஐவேளைத் தொழுவது" என நபியவர்கள் கூறினார் கள். அதனைத் தவிர வேறு ஏதும் கடமை என் மீது உண்டா என அம்மனிதர் கேட்டார். அதற்கு நபியவர்கள் நீர் மேலதிகமாக நபிலாகத் தொழுதா லே தவிர என்று கூறி விட்டு மேலும் றமழான் மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும் என்றார்கள். அதனைத் தவிர வேறு ஏதும் என் மீது கடமையுண் டா என அம்மனிதர் கேட்டார். அதற்கு நபியவர்கள் நீர் மேலதிகமாக நபிலான நோன்பு நோற்றாலே தவிர என்று கூறி விட்டு, ஸகாத் கடமையை அம்மனிதருக்கு ஞாபகப்படுத்தினார்கள். அதனைத் தவிர வேறு கடமை ஏதும் என் மீது உண்டா என அம்மனித்ர் கேட்டார். நீர் மேலதிகமாக தானதர்மம் கொடுத்தாலே தவிர வேறு ஏதும் இல்லை எனக் கூறினார்கள். "அல்லாஹ்வின் மீது ஆணையாக இதனை விட எதனையும் அதிகமாகச் செய்யவோ, இவைகளில் எதனையும் குறைக்கவோ மாட்டேன்" என்று கூறிக் கொண்டு அம்மனிதர் திரும்பிச் சென் றார் என ஹதீஸ் அறிவிப்பாளர் கூறுகிறார். இதற்கு நபியவர்கள் "அவர் உண்மை கூறினால் வெற்றி பெறுவார்" என்று கூறினார்கள். மற்றொரு

அறிவிப்பில் "அவர் உண்மை கூறினால் சுவனம் நுழைவார்" என நபியவர்கள் கூறினார்கள். (புகாரி 46, முஸ்லிம் 11).

அபூ ஹுரைரா (றழி) அவர்களும் இதே போன்று அறிவித்துள்ளார்கள். மற்றொரு அறிவிப்பில் "இரத்த உறவினருடன் நீர் சேர்ந்து வாழ வேண் டும்" என்று வந்துள்ளது. அறிவிப்பவர் அபூ அய்யூப். (முஸ்லிம்15). ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதர் நான் கடமையான தொழுகைகளைத் தொழுது, றமழான் மாதத்தில் நோன்பு நோற்று, மார்க்கத்தில் ஆகுமாக்கப்பட்டவைகளை ஆகுமாக்கி, தடுக்கப்பட்ட வைகளை தவிர்ந்து, இவைகளை விடவும் மேலதிகமாக எதனையும் செய்யா விட்டால் நான் சுவனம் நுழைவேனா? எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் "ஆம்" என பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக இதனை விடவும் மேலதிகமாக எதனையும் நான் செய்யமாட்டேன் என்று அம்மனிதர் கூறினார். (முஸ்லிம் 15)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் விசுவாசம் கொண்டு, தொழுகை யை நிலை நிறுத்தி, றமழான் மாதத்தில் நோன்பு நோற்கிறாரோ அவரை சுவனத்தில் நுழைவிப்பது

அல்லாஹ்விடம் நிச்சயமாகி விட்டது. அவர் அல்லாஹ்வின் பாதையில் போராடினாலும், அல்லது அவர் பிறந்த மண்ணில் அமர்ந்திருந்தாலும் சரியே!." (புகாரி 6:11 - 2790)

**4- அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை மனனமிடல்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் இருக்கின்றன. யார் அவைகளை கணக்கிடு (மனனமிடு)கிறாரோ அவர் சுவனம் நுழைவார்." (புகாரி5:354 இலக்கம் 7136)

கத்தாபி கூறுவதாக இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இது போன்ற நபி மொழிகளில் வந்துள்ள "அல் இஹ்ஸா:" (எண்ணுதல்) என்ற சொல் பல கருத்துகளை பொதிந்துள்ளது:

1- அத்திருநாமங்களை சம்பூரணமாகக் கணக்கிடுவது. அதாவது அவைகளில் சிலதோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாமல் அனைத்தையும் கொண்டு அல்லாஹ்வை அழைப்பதும், அனைத்தையும் கொண்டு அவனைப் புகழ்வதும் ஆகும். இவ்வாறு செய்யும்போது அதற்காக வாக்களிக்கப்பட்டுள்ள கூலி நிச்சயமாகி விடுகிறது.

2- சரியாகக் கணக்கிடுவது. இறைவன் திருமறையில் குறிப்பிடுவது போன்று:“நீங்கள் சரியாகக் கணக்கிட்டுக் கொள்ள மாட்டீர்கள் என்பதையும் அவன் அறிகிறான்” (73:20) அக்கருத்திலே இந்நபி மொழியும் வந்துள்ளது: “நீங்கள் மார்க்கத்தில் நிலைத்து இருங்கள். மேலும் நிலைத்திருப்பதன் யதார்தத்தை உங்களால் அடைய முடியாது.” இதன் கருத்து: இத்திருநாமங்கள் வேண்டி நிற்கின்ற கருத்துகளின் படி செயல்படுவதாகும். அதாவது அவைகளின் கருத்துகளை கவனித்து, அவைகள் அவசியப்படுத்துபவைகளை தனக்கு அவசியப்படுத்திக் கொள்வது. அவன் “உணவளிப்பவன்” என்று கூறினால் அவனின் உணவில் நம்பிக்கை வைக்க வேண்டும். அவ்வாறே ஏனைய திருநாமங்களும்.

3- அத்திருநாமங்களின் கருத்துகளை சம்பூரணமாக அறிந்து கொள்வது. (பத்ஹுல்பாரி 11:225)

**5- அல்குர்ஆனை ஓதுவதும் அதன்படி செயல்படுவதும்.**

அல்குர்ஆனை ஓதுவதன் சிறப்பும், அதன் படி செயல்படுவதன் சிறப்பும் பற்றி வந்துள்ள நபி மொழிகள்:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மறுமையில் குர்ஆன் உடையவருக்கு இவ்வாறு கூறப்படும். நீர் ஓதுவீராக! அந்தஸ்தில் உயர்ந்து செல்வீராக! மேலும் குர்ஆனைத் தெளிவாகவும், நிறுத்தி, நிறுத்தியும் ஓதுவீராக. உலகத்தில் நீர் ஓதி வந்தது போன்று! நீர் ஓதுகின்ற வசனத்தின் கடைசியிலே உமது அந்தஸ்து உள்ளது." )திர்மிதி 5:163)

இந்நபி மொழிக்கு விளக்கம் கூறும் போது முபாரக்பூரி அவர்கள் கூறுகின்றார்கள்: திருமறையை ஓதி அதன் படி செயல்படுவோருக்கு சுவனம் நுழையும் போது இவ்வாறு கூறப்படும். "தரஜா" என்றால் சுவனத்தில் உள்ள அந்தஸ்துகளில் உயர்ந்து செல்வீராக! என்பதாகும். (துஹ்பதுல் அஹ்வதீ: 8:232)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "திறமையுடன் திருமறையை ஓதுபவர் சங்கைமிக்க நல்லோர்களான வானவரர்களுடன் இருக்கிறார். சிறமத்துடன் திக்கி திக்கி ஓதுபவருக்கு இரு கூலிகள் உண்டு." (புகாரி 8:691 முஸ்லிம் 1:550). இமாம் புகாரியிடம் திறமை என்பதற்குப் பதிலாக குர்ஆனை மனனமிட்டவர் என்று வந்துள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மறுமையில் குர்ஆனை ஓதி அதன் படி செயல்பட்டவர் வருவார். அவ்வேளை குர்ஆன் இறைவனிடம் கூறும். இறைவா அவருக்கு எதனையும் அணிவித்து கண்ணியப்படுத்துவாயாக! அப்போது அவருக்கு சங்கைக் கிரீடம் அணிவிக்கப்படும். இறைவா அவருக்கு மேலும் அணிவிப்பாயாக! என்று பின்பு குர்ஆன் கூறும். அப்போது அவருக்கு கௌரவ ஆடை அணிவிக்கப்படும். இறைவா அவரைப் பொருந்திக் கொள்வாயாக! என்று பின்னர் கூறும். அப்போது நீர் ஓதுவீராக! சுவன படித்தரங்களில் நீர் உயர்ந்து செல்வீராக என்று அவருக்குக் கூறப்படும். ஒவ்வொரு வசனத்துக்கும் ஒரு நன்மை அதிகரிக்கப்படும்." (திர்மிதி 5:163)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அல்குர்ஆன் பரிந்து பேசும். மேலும் வாதிடும். அதன் வாதம் உண்மைப்படுத்தப்படும். அல்குர்ஆன் யாரை முன் வைக்கின்றதோ அவரை சுவனத்துக்கு அழைத்துச் செல்லும். யாரை அதன் பின்னால் வைக்கிறதோ அவரை நரகத்துக்கு அழைத்துச் செல்லும்." (இப்னு ஹிப்பான் 1:167)

இப்னுல் அஸீர் அவர்கள் இதற்கு விளக்கம் கூறும் போது இவ்வாறு கூறுகின்றார்கள்: எவர் குர்ஆனின் போதனைப் படி வாழ்கிறாரோ அவருக்

காக குர்ஆன் அல்லாஹ்விடம் வாதிடும். தர்க்கம் புரியும். அதன் வாதமும் உண்மைப்படுத்தப்படும். ஏனெனில் குர்ஆன் இறைவனிடத்தில் அதன் படி வாழ்ந்தோருக்காக சிபாரிசு செய்யும். அதனுடைய பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும். அதன் போத னைப்படி செயல்படாதவருக்கெதிராக அதன் எதிர் வாதமும் உண்மைப்படுத்தப்படும்.

சில திருமறை வசனங்கள் மற்றும் அத்தியாயங் களின் சிறப்பு பற்றி நபி மொழிகள் வந்துள்ளன. அவைகள் சுவனம் நுழைவதற்கு துணையாக உள்ளன. அல்லது அவைகளை ஓதுபவருக்கு சுவனத்தில் ஒரு மாளிகை கட்டப்படும். அவைக ளில் சில கீழ்வருமாறு:

அ) ஆயதுல் குர்ஸி:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "கடமையான ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் யார் ஆயதுல் குர்ஸியை ஓதுகிறாரோ அவர் சுவனம் நுழைய மரணத்தைத் தவிர வேறு ஏதும் அவருக்கு தடையாக இருக் காது." (நஸாஈ 182)

ஆ) ஸூரதுல் முல்க்:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள்

அறிவிக்கின்றார்கள்: "திருமறையில் ஓர் அத்தியாயம் உள்ளது. அதில் மொத்தம் முப்பது வசனங்களே இருக்கின்றன. அதனை ஓதியவரை சுவனத்தில் நுழைவிக்கும் வரை அது அல்லாஹ்விடத்தில் அவருக்காக வாதிடும். அது தபாரக் (முல்க்) அத்தியாயமாகும்." (தபரானி).

இந்நபி மொழியை அபூ ஹுரைரா (றழி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: "திருமறையில் முப்பது வசனங்களைக் கொண்ட ஒரு அத்தியாயம் உள்ளது. அது பாவங்கள் மன்னிக்கப்படும் வரை அதனை ஓதியவருக்காக அல்லாஹ்விடம் பரிந்து பேசும். அது "தபாரகல்லதீ பியதிஹில் முல்க்" என்ற அத்தியாயமாகும்." (திர்மிதி 5:151).

## இ) குல்ஹுவல்லாஹு அஹத்

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஒருவர் "குல் ஹுவல்லாஹு அஹத்" என்ற ஸூராவை ஓதுவதை நபியவர்கள் செவியுற்ற போது நிச்சயமாகி விட்டது என்று கூறினார்கள். என்ன நிச்சயமாகி விட்டது என நான் நபியவர்களிடம் கேட்டேன். அவருக்கு சுவனம் நிச்சயமாகி விட்டது என நபியவர்கள் பதிலளித்தார்கள்." (முவத்தஃ 1:208 திர்மிதி 5:154)

குபா பள்ளி வாசலில் அன்ஸாரிகளுக்கு தொழுகை நடாத்திக் கொண்டிருந்த நபித்தோழரின் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது அனஸ்

(றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொரு ரகஅத்திலும் குல்ஹுவல்லாஹு அஹத் ஸூராவை ஓதிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ரகஅத்திலும் இந்த ஸூராவை ஓதுவதற்கு உம்மைத் தூண்டியது எதுவென நபியவர்கள் கேட்டார்கள். அதற்கவர் அல்லாஹ்வின் தூதரே! நான் அதனை நேசிக்கிறேன் என்று கூறினார். அதனை நீர் நேசிப்பது உம்மை சுவனத்தில் நுழைவிக்கும் என நபியவர்கள் கூறினார்கள்." (புகாரி 2:255).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக முஆத் பின் அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் குல்ஹுவல்லாஹு அஹத் அத்தியாயத்தை பத்துமுறை பூரணமாக ஓதுகிறாரோ அல்லாஹ் அவருக்கு சுவனத்தில் ஒரு மாளிகையைக் கட்டுவான்." (அஹ்மத் 3:437).

### 6- அல்லாஹ்வை திக்ர் செய்தல்:

திக்ர் செய்வதன் சிறப்பு பற்றியும் அது சுவனம் நுழைவதற்கு காரணமாக இருப்பது பற்றியும் பல நபி மொழிகள் வந்துள்ளன.

ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகியவைகளின் மகிமை பற்றி வந்துள்ள சில நபி மொழிகள் கீழ்வருமாறு:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எனது வின்னுலக யாத்திரையின் போது இப்ராஹீமை நான் சந்தித்தேன். அப்போது அவர்கள் முஹம்மதே உங்கள் உம்மத்துக்கு எனது ஸலாத்தை எத்தி வைப்பீராக! மேலும் சுவனம் இனிமையான நீரையும், நறுமணம் மிக்க மண்ணையும் தன்னகத்தே கொண்டது. அது விசாலமான சம தரையாகும். அங்குள்ள மரங்களின் வித்துகள் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகியவைகளாகும் என்பதையும் அவர்களுக்கு கூறுவீராக!." (திர்மிதி 5:476)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் "ஸுப்ஹானல்லாஹில் அழீம் வபிஹம்திஹி" என்று கூறுகின்றாரோ அவருக்கு சுவனத்தில் ஒரு பேரீத்தம் மரம் நடப்படுகிறது." (திர்மிதி 5:477) .

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் ஒரு மரத்தை நட்டிக் கொண்டிருக்கும் போது நபியவர்கள் அவர்களைக் கடந்து சென்றார்கள். அப்போது அவர்கள் அபூ ஹுரைராவே நீர் என்ன நட்டுகின்றீர் என்று கேட்டார்கள். எனக்கு ஒரு மரத்தை நட்டுகின்றேன் என்று கூறினேன். அதற்கு நபியவர்கள் இதனை விடவும்

**சிறந்த விளை பயிரை உமக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்டார்கள். ஆம் அல்லாஹ்வின் தூதரே என்றார்கள் நபித் தோழர். ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹுஅக்பர் என்று கூறுவீராக! இவை ஒவ் வொன்றுக்கும் சுவனத்தில் ஒரு மரம் நட்டப்படும் என நபியவர்கள் கூறினார்கள்." (இப்னுமாஜா 2:1251).**

குறிப்பிட்ட சில திக்ருகளின் சிறப்பு பற்றி நபி மொழிகள் வந்துள்ளன. அவைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன்:

**அ) கடமையான ஒவ்வொரு தொழுகையின் பின்பும், தூங்கும் போதும் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், அல்லாஹு அக்பர் என்று கூறுவது.**

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார் கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சில ஏழைகள் வந்து, செல்வந்தர்கள் தமது செல்வத்தால் உயர் அந்தஸ்துகளையும், நிலையான இன்பத்தையும் அடைந்து கொள்கின்ற னர். அவர்கள் நாம் தொழுவது போன்று தொழு கின்றனர். நாம் நோன்பு நோற்பது போன்று நோன்பு நோற்கின்றனர். அவர்களின் மேலதிகமான செல்வத்தால் ஹஜ் செய்கின்றனர். உம்ரா செய் கின்றனர். ஜிஹாத் செய்கின்றனர். தர்மம் செய்கின் றனர். இதனைக் கேட்ட நபியவர்கள் இவ்வாறு

கூறினார்கள்: உங்களுக்கு ஒரு விடயத்தை சொல் லித் தரட்டுமா? அதனை நீங்கள் செய்தால் நன்மையில் உங்களுக்கு முன் சென்றவர்களை நீங்கள் அடைந்து கொள்வீர்கள். உங்களுக்குப் பின் வருகின்ற எவரும் உங்களை அடையமாட்டார் கள். அவர்களுக்கு மத்தியில் நீங்களே சிறந்தவர்க ளாகத் திகழ்வீர்கள். அது போன்ற அமலைச் செய்வோரைத் தவிர என்று கூறி விட்டு, ஒவ்வொரு தொழுகையின் பின்பும் நீங்கள் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹுஅக்பர் முப்பத்தி மூன்று முறை கூறுங்கள் என நபியவர்கள் கூறினார்கள். பின்னர் அவைகளைக் கூறும் விடயத்தில் நாம் கருத்து முரண்பட்டோம். முப்பத்தி மூன்று முறை ஸுப்ஹானல்லாஹ் என்றும், அல்ஹம்துலில்லாஹ் என்று முப்பத்தி மூன்று முறையும் அல்லாஹு அக்பர் என்று முப்பத்தி நாலு முறையும் கூறுவோம் என சிலர் கூறினர். எனவே நபியவர்களிடம் திரும்பிச் சென்று இதுபற்றி கேட்ட போது இவை ஒவ்வொன்றையும் முப்பத்தி மூன்று முறை கூறும் படி நபியவர்கள் கூறினார்கள்." (புகாரி 2:325 முஸ்லிம் 1:416).

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார் கள்: இந்நபி மொழியில் வந்துள்ள உயர் அந்தஸ் துகள் என்றால் சுவர்க்கத்தில் உள்ள உயர் அந்தஸ்துகள் அல்லது அல்லாஹ்விடத்தில் உள்ள

உயர் மகிமை என்ற இரு கருத்துகளுக்கும் இடமுண்டு.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "இரு பண்புகள் உள்ளன. அவையிரண்டையும் ஒரு முஸ்லிமான அடியான் ஒழுங்காக கடைபிடித்தால் அவன் சுவனம் நுழைவான். அவையிரண்டையும் செய்வது எளிதானது. செய்வோர் சொற்பமானவர்கள். (அவையாவன) ஒவ்வொரு தொழுகையின் பின்பும் ஸுப்ஹானல்லாஹ் பத்து முறையும், அல்ஹம்து லில்லாஹ் பத்து முறையும், அல்லாஹுஅக்பர் பத்து முறையும் கூற வேண்டும். அது நாவினால் நூற்றி ஐம்பது முறை கூறியதாகவும், தராசியில் ஆயிரத்து ஐநூறு (முறையாகும்) கணிக்கப்படுகிறது. மேலும் ஸுப்ஹானல்லாஹ் முப்பத்தி மூன்று முறையும் அல்ஹம்துலில்லாஹ் முப்பத்தி மூன்று முறையும் அல்லாஹுஅக்பர் முப்பத்தி நான்கு முறையும் தூங்கும் போது கூற வேண்டும். அது நாவினால் நூறு முறை கூறியதாகவும், தராசியில் ஆயிரமாகவும் இருக்கும். நபியவர்கள் தனது கையால் கணக்கிட்டுக் கூறுவதை நான் கண்டேன். அப்போது நபித்தோழர்கள் கேட்டார்கள்! அல்லாஹ்வின் தூதரே எவ்வாறு அவையிரண் டையும் செய்வது எளிதாகவும் அவைகளைச் செய்வோர் குறைவாகவும் இருப்பார்கள்? அதற்கு

நபியவர்கள் உங்களில் ஒருவர் தூங்கும் போது ஷைத்தான் வந்து அதனைக் கூறுவதற்கு முன் அவரைத் தூங்கச் செய்து விடுவான். மேலும் ஒருவர் தனது தொழுகையில் அதனைக் கூற முன் அவரின் தேவைகளை ஞாபகப்படுத்துவான்." (அஹ்மத் 2:205 அபூதாவூத் 5:309)

## ஆ) வுழூ செய்த பின் ஓதும் திக்ரை ஓதுவது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உக்பா பின் ஆமிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "உங்களில் எவர் சம்பூரணமாக வுழூ செய்து பின்னர் "அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு" என்று கூறுகிறாரோ அவருக்கு சுவனத்தின் எட்டு வாயில்களும் திறக்கப்பட்டு அவைகளில் நாடிய வாயிலால் அவர் நுழைவார்." (முஸ்லிம 1:209).

## இ) லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சுவன பொக்கிஷங்களில் ஒன்றை உமக்கு அறிவிக்கட்டுமா? என நபியவர்கள் கேட்ட போது ஆம் அல்லாஹ்வின் தூதரே எனக்கு அறிவித்துத் தாருங்கள் என்றேன். அதற்கு நபியவர்கள் "லா ஹவ்ல வலா குவ்வத இல்லா

பில்லாஹ்" எனக் கூறு என்றார்கள்." (புகாரி 11:187 முஸ்லிம் 4:2076).

அபூதர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எனது நண்பர் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) "லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்" என்று அதிகமாகக் கூறுமாறு எனக்கு உபதேசித்தார்கள். ஏனெனில் அது சுவன பொக்கிஷங்களில் ஒன்றாகும்." (அஹ்மத் 5:457).

## ஈ) கடைத்தெருவுக்கு செல்லும் போது திக்ர் செய்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உமர் பின் கத்தாப் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் கடைத் தெருவுக்குச் செல்லும் போது "லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது வஹுவ ஹய்யுன் லா யமூது பியதிஹில் கைரு வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்" என்று கூறுகிறாரோ அல்லாஹ் அவருக்கு பல ஆயிரம் நன்மைகளை எழுதி, பல ஆயிரம் தீமைகளை அழித்து விடுவதுடன் சுவனத்தில் ஒரு வீட்டையும் அவருக்காக கட்டுகிறான்." (திர்மிதி 5:457)

## உ) தூங்கும் போது திக்ர் செய்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஒருவர் தூங்குவதற்காக சென்றால் அவரிடத்தில் ஒரு வானவரும், ஒரு ஷைத்தானும் விரைகின்றனர். வானவர் கூறுவார்: நீர் இந்நாளை நன்மையுடன் முடிப்பாயாக. ஷைத்தான் கூறுவான்: நீர் இந்நாளை தீமையுடன் முடிப்பாயாக. எனவே அல்லாஹ்வை திக்ர் செய்து விட்டு தூங்கினால் அவரை வானவர் பாதுகாத்துக் கொண்டிருப்பார். அவர் தூக்கத்திலிருந்து விழிக்கும் போது வானவர் கூறுவார்: "நன்மையுடன் இந்நாளை ஆரம்பிப்பாயாக". மேலும் ஷைத்தான் கூறுவான்: "தீமையுடன் இந்நாளை ஆரம்பிப்பாயாக". அவர்

الحمد لله الذي رد علي روحي ولم يمتها في منامها ، الحمد لله الذي يمسك السموات والارض ان تزولا ولئن زالتا ان امسكهما من احد من بعده انه كان حليما غفورا)

அல்ஹம்துலில்லாஹில்லதீ ரத்த அலய்ய ரூஹீ வலம் யுமித்ஹா பீ மனாமிஹா அல்ஹம்துலில்லாஹில்லதீ யும்ஸிகுஸ் ஸமாவாதி வல் அர்ழ அன் ததூலா வலஇன் தாலதா இன் அம்ஸகஹுமா மின் அஹதின் மின் பஃதிஹி இன்னஹு கான ஹலீமன் ஃகபூரா. பொருள்: எனது உயிரை நித்திரையில் மரணிக்கச் செய்யாமல் மீட்டித் தந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். வானங்களும் பூமியும் அவை இரண்டும் விலகிவிடாதவாறு தடுத்

துக் கொண்டிருக்கின்ற அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அவை இரண்டும் விலகுமாயின், அதற்குப் பிறகு வேறெவரும் அவ்விரண்டையும் தடுத்து நிறுத்த முடியாது. நிச்சயமாக அவன் பொறுமையுடையவன். மிக மன்னிப்பவன்.

الحمد لله الذي يمسك السماء أن تقع على الارض إلا بإذنه

அல்ஹம்துலில்லாஹில்லதீ யும்ஸிகுஸ் ஸமாஅ அன் தகஅ அலல் அர்ழி இல்லா பிஇத்னிகி. பொருள்: தன் அனுமதியின்றி பூமியின் மீது வானம் விழுந்துவிடாதவாறு தடுத்துக் கொண்டிருக்கின்ற அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். என்றும் கூறி பின்னர் கட்டிலிலிருந்து கீழே விழுந்து மரணித்தால் அவர் சுவனம் நுழைவார்." (அபூ யஃலா 3:326)

### 7- அல்லாஹ்விடம் சுவனத்தை வேண்டுவது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மூன்று முறை அல்லாஹ்விடம் சுவனத்தை வேண்டியவருக்கு இறைவா அவரை சுவனத்தில் நுழைவிப்பாயாக என சுவனம் கூறும். மேலும் எவர் மூன்று முறை நரகத்திலிருந்து பாதுகாப்புத் தேடுகிறாரோ அவரை நரகத்திலிருந்து பாதுகாக்குமாறு நரகம் கூறும்." (திர்மிதி 4:603)

## 8- தவ்பா செய்தல்

அல்லாஹ் திருமறையில் கூறுகின்றான்: "தவ்பா செய்து, (பாவங்களிலிருந்து விலகி) ஈமான் கொண்டு, (ஸாலிஹான) - நல்ல - செயல்களைச் செய்கிறார்களே அவர்களைத் தவிர அத்தகைய (ஸாலிஹான)வர்கள் சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள்." (19:60)

மேலும் கூறுகின்றான்:"ஈமான் கொண்டவர்களே! கலப்பற்ற (மனதோடு) அல்லாஹ்விடம் தவ்பா செய்து, பாவமன்னிப்புப் பெறுங்கள். உங்கள் இறைவன் பாவங்களை விட்டுப் போக்கி உங்களைச் சுவனச் சோலைகளில் பிரவேசிக்கச் செய்வான். அவற்றின் கீழே ஆறுகள் (சதா) ஓடிக் கொண்டே இருக்கும்." (66:8)

## 9- ஸெய்யிதுல் இஸ்தி:ஃக்பார்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஷத்தாத் பின் அவ்ஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஸெய்யிதுல் இஸ்தி:ஃக்பார் இவ்வாறு கூறுவதாகும்:

اللهم انت ربي لااله إلا انت خلقتني وانا عبدك وانا على عهدك ووعدك ماستطعت اعوذ بك من شرما صنعت ابوء لك بنعمتك عليّ وابوء بذنبي فاغفرلي فانه لايغفر الذنوب الاانت

அல்லாஹும்ம அன்த றப்பீ லாஇலாஹ இல்லா அன்த கலக்தனீ வஅன அப்துக வஅன அலா அஹ்திக வவ:ஃதிக மஸ்ததஃ:து அஊது பிக மின்

ஷர்ரி மா ஸனஃது அபூஉ லக பினிஃமதிக அலய்ய வஅபூஉ பிதன்பீ பஃக்பிர்லீ பஇன்னஹு லா யஃகபிருத் துனூப இல்லா அந்த – என்று யார் பகளில் அதில் உறுதி கொண்டவராகக் கூறுகிறா ரோ அவர் அன்று மாலையாவதற்கு முன் மரணித் தால் அவர் சுவனவாசிகளில் ஒருவராக ஆகி விடுவார். மேலும் எவர் இரவில் உறுதிகொண்டவராக அதனைக் கூறுகிறாரோ அவர் அதிகாலைக்கு முன் மரணித்தால் சுவனவாசிகளில் ஒருவராக ஆகி விடுவார்." (புகாரி 11:97) பொருள்: யா அல்லாஹ்! நீயே எனது இரட்சகன். உன்னைத் தவிர வணக் கத்துக்குரிய இறைவன் வேறில்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உனது அடிமை! நான் - என்னால் முடிந்த அளவுக்கு – உனது உடன்படிக்கை மற்றும் வாக்குறுதியின் மீது நிலைத் திருக்கிறேன். நான் என்னென்ன செயல்களைச் செய்தேனோ அவற்றின் தீமையை விட்டும் உன்னி டம் பாதுகாவல் தேடுகிறேன். நீ என் மீது பொழிந்த அருட்கொடைகளைக் கொண்டு உன் பக்கம் நான் மீளுகிறேன்! மேலும் என்னுடைய பாவங்களை நான் ஏற்று மொழிகிறேன். எனவே நீ என்னை மன்னித்து விடுவாயாக! ஏனெனில் பாவங்களை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை.

## 10 - அல்லாஹ்வுக்காக கல்வியைத் தேடிச் செல்வது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றாரக்ள்: "யார் அறிவைத் தேட ஒரு பாதையில் செல்கிறாரோ அல்லாஹ் அவருக்கு சுவனத்துக்குரிய ஒரு வழியை இலகுபடுத்துகிறான்." (புகாரி 11:97).

## 11 - பர்ழான, நபிலான தொழுகைகள்:

### அ) ஐவேளைத் தொழுகைகள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உப்பாதா பின் ஸாமித் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஐவேளைத் தொழுகையை அல்லாஹ் அடியார்கள் மீது கடமையாக்கினான். அத்தொழுகைகளில் எதனையும் இழிவாகக் கருதி வீணாக்காமல் யார் ஒழுங்காக நிறைவேற்றுகிறாரோ அவரை சுவனத்தில் நுழைவிப்பதற்கு அல்லாஹ்விடம் ஓர் ஒப்பந்தம் உள்ளது. யார் அத்தொழுகைகளை நிறைவேற்றவில்லையோ அவரை சுவனத்தில் நுழைவிப்பதற்கு அல்லாஹ்விடம் எவ்வித ஒப்பந்தமும் இல்லை. அல்லாஹ் நாடினால் அவனை வேதனை செய்வான்.

நாடினால் அவனை சுவனத்தில் நுழைவிப்பான்." (மாலிக் 1:123, அபூதாவூத் 1:295).

**ஆ) பஜ்ர் தொழுகையும், அஸர் தொழுகையும்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல் அஷ்அரீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் குளிரான இரு தொழுகைகளையும் தொழுகின்றாரோ அவர் சுவனம் நுழைவார்." (புகாரி 2:52 முஸ்லிம் 1:440).

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: குழுமையான இரு தொழுகைகள் என்பது பஜ்ர், அஸர் தொழுகைகளாகும். கத்தாபி கூறுகின்றார்: குளிரான என கூறப்பட்டதற்காகன காரணம் அவையிரண்டும் காலையிலும் மாலையிலும் தொழும் தொழுகைகளாகும். அவ்விரு நேரங்களிலும் சூடு நீங்கி சற்று குளிரான காற்று வீசுகின்றது. (பத்ஹுல் பாரி 2:53).

**இ) ஸுன்னத்தான தொழுகைகள்**

தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டதாக உம்மு ஹபீபா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எந்தவொரு அடியான் தினந்தோரும் கடமையான தொழுகையைத் தவிர பன்னிரண்டு ரக்அத்துகள் நபில் தொழுகின்றாரோ அவருக்காக அல்லாஹ் சுவனத்

தில் ஒரு வீட்டைக் கட்டுகின்றான்." (முஸ்லிம் 1:503).

இமாம் முஸ்லிமிடம் மற்றொரு சொல்லில் இவ்வாறு வந்துள்ளது: "யார் தினந்தோரும் பன்னிரண்டு ரக்அத்துகள் தொழுகின்றாரோ அவருக்கு சுவனத்தில் ஒரு மாளிகை கட்டப்படும்." இமாம் திர்மிதி அவர்கள் இந்நபி மொழியை சற்று விரிவாக இவ்வாறு அறிவித்துள்ளார்கள்: "லுஹருக்கு முன்பு நான்கு ரக்அத்துகளும், அதற்குப் பின் இரு ரக்அத்துகளும், மஃரிபுக்குப் பின் இரு ரக்அத்துகளும், இஷாவுக்குப் பின் இரு ரக்அத்துகளும், பஜ்ருக்கு முன் இரு ரக்அத்துகளுமாகும்." (திர்மிதி 2:415).

## ஈ) வுழூத் தொழுகை

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "பஜ்ர் தொழுகையின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிலால் (றழி) அவர்களிடம் இஸ்லாத்தில் தாங்கள் செய்த பயனுள்ள மிகச் சிறந்த அமல் என்னவென்று கேட்டார்கள். நிச்சயமாக நான் இரவு சுவனத்தில் எனக்கு முன்னால் உமது பாதனிகளின் அசைவைக் கேட்டேன். அதற்கு பிலால் (றழி) அவர்கள் கூறினார்கள்: நான் இரவில் அல்லது பகலில் சம்பூரணமாக வுழூ செய்தால் அல்லாஹ் எனக்கு தொழுவதற்கு எழுதியுள்ள அளவு தொழுவதைத் தவிர வேறு பயனுள்ள சிறந்த அமல்

எதனையும் இஸ்லாத்தில் நான் செய்யவில்லை. புரைதா (றழி) அவர்கள் இந்நபி மொழியை இவ்வாறு அறிவிக்கிறார்கள்: " பிலாலே எச்செயலால் சுவனத்துக்கு என்னை முந்தி விட்டீர்கள். நான் சுவனத்துக்கு நுழையும் போதெல்லாம் எனக்கு முன்னால் நீங்கள் நுழையும் சத்தத்தைக் கேட்கி றேன். நேற்று இரவு நான் சுவனத்துக்கு நுழைந் தேன். அப்போது எனக்கு முன்னால் நீங்கள் செல் லும் சத்தத்தை நான் கேட்டேன். அதற்கு பிலால் (றழி) அவர்கள் நான் ஒவ்வொரு முறையும் பாங்கு கூறினால் இரு ரக்அத்துகள் தொழுவேன். எனக்கு (சிறு)தொடக்கு ஏற்படும் போதெல்லாம் வுழூ செய்து விட்டு இரு ரக்அத்துகள் தொழுவேன் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட நபியவர்கள் அவையிரண்டின் மூலமாகத்தான் சுவனத்தில் எனக்கு முன் நீங்கள் சென்றிருக்கிறீர்கள் என்றார்கள்." (திர்மிதி 5:579).

இந்நபி மொழியின் கருத்து நான் நேற்று இரவு சுவனம் நுழைவது போன்று கனவில் கண்டேன் என்பத்தாகும் என திர்மிதி அவர்கள் கூறுகின்றார் கள். நபியவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் "நபிமார்களின் கனவு வஹியாகும்."

**உ) உள்ளச்சத்துடன் இரு ரக்அத்துகள் தொழு வது.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக உக்பா பின் ஆமிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யாரொரு முஸ்லிம் முறையாக வுழூ செய்து பின்னர் எழுந்து உள்ளச்சத்துடன் இரு ரக்அத்துகள் தொழுகிறாரோ அவருக்கு சுவனம் நிச்சயமாகி விட்டது." (முஸ்லிம் 1:209).

**ஊ) அல்லாஹ்வுக்காக அதிகம் ஸுஜூது செய் தல்.**

காலித் பின் மஃதான் (றழி) அவர்கள் அறிவிக் கின்றார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்களின் அடிமை ஸவ்பான் அவர்களை நான் சந்தித்தேன். அல்லாஹ் என்னை சுவனத் தில் நுழைவிக்கின்ற ஒரு அமலை எனக்கு அறிவிக் குமாறு நான் அவர்களிடம் கேட்டேன். அல்லது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான அமலை எனக்கு அறிவியுங்கள் என்று கூறியிருப்பார். அதற்கு அவர் கள் மௌனமாக இருந்தார்கள். மீண்டும் கேட் டேன். அப்போதும் மௌனமாக இருந்தார்கள். மூன்றாவது முறையாகவும் கேட்ட போது இது பற்றி நான் நபியவர்களிடம் கேட்டேன். அதற்கு நபியவர் கள் "நீர் அல்லாஹ்வுக்கு அதிகம் ஸுஜூது செய்வீராக! ஏனெனில் நீர் அல்லாஹ்வுக்கு ஒரு ஸஜதாவை செய்தால் அதன் மூலம் அல்லாஹ்

உனது ஓர் அஸ்தஸ்தை உயர்த்தி, ஒரு பாவத்தை அழித்து விடுகிறான்." (முஸ்லிம் 1:353).

றபீஆ பின் கஃப் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு இரவில் தங்குவேன். அவ்வேளை நபியவர்கள் வுழூ செய்யவும், தமது தேவைகளை நிறைவு செய்யவும் தண்ணீர் கொண்டு வந்த போது உமக்கு விரும்பியதைக் கேளுங்கள் என நபியவர்கள் என்னிடம் கூறினார்கள். அதற்கு நான் உங்களோடு சுவனத்தில் ஒன்றாக இருக்க விரும்புகிறேன் என்று கூறினேன். அதனைத் தவிர வேறு ஏதும் உண்டா என நபியவர்கள் என்னிடம் கேட்க நான் அதனைத்தான் விரும்புகிறேன் என்று கூறினேன். அதற்கு நபியவர்கள் நீர் அதிகம் ஸுஜூது செய்வது மூலமாக என்னோடு இருக்க முயற்சி செய்யுமாறு கூறினார்கள்." (முஸ்லிம் 1:353).

### எ) இராத் தொழுகை

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் ஸலாம் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மக்களே நீங்கள் உங்களுக்கு மத்தியில் ஸலாமைப் பரப்புங்கள். (ஏழைகளுக்கு) உணவூட்டுங்கள். இரத்த பந்துக்களுடன் சேர்ந்து வாழுங்கள். மக்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது இரவில் எழுந்து தொழுங்

கள். சாந்தியாக நீங்கள் சுவனத்தில் நுழைவீர்கள்." (திர்மிதி 4:562 இப்னு மாஜா 1:423).

**12- வணக்கம் புரிவதற்காக பள்ளிக்கு அதிகம் செல்வது**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் காலையில் அல்லது மாலையில் பள்ளிக்குச் செல்கிறாரோ அவ்வாறு அவர் செல்லும் போதெல்லாம் அவருக்காக அல்லாஹ் (சுவனத்தில்) ஒரு தங்குமிடத்தை ஏற்பாடு செய்கிறான்". (புகாரி2:148 முஸ்லிம்1:463).

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இச்சிறப்பு பொதுவாகவே பள்ளிக்கு வருவோருக்கு கிடைக்கிறது என்பதே நபி மொழியின் வெளிப்படையான கருத்தாகும். எனினும் இதன் நோக்கம் வணக்கத்துக்காகவும் வணக்கங்களின் பிரதா' ı வணக்கமாகிய தொழுகைக்கு வருவோரைக் குறிப்பாக்குவதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " மூன்று பேர்கள் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்விடம் உத்தரவாதத்திற்குரியவர்கள். அவர்களில் ஒருவர் வாழ்ந்தால் அருள்பாளிக்கப்படுவார். மேலும் (தீங்குகளிலிருந்து) பாதுகாக்கப்படுவார். மரணித்தால் அல்லாஹ்

அவரை சுவனத்தில் நுழைவிப்பான். அவர்களில் பள்ளிக்கு செல்பவரும் ஒருவராவார். அவர் அல்லாஹ்விடம் உத்தரவாதத்திற்குரியவர் ஆவார்." (அபூதாவூத் 3:16 இப்னு ஹிப்பான் 1:359)

## 13 - பள்ளிகளை அமைப்பது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டதாக உஸ்மான் பின் அப்பான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:" யார் அல்லாஹ்வுக்காக ஒரு பள்ளியைக் கட்டுகிறாரோ அவருக்காக அல்லாஹ் அது போன்றதொன்றை சுவனத்தில் கட்டுகின்றான்." (புகாரி 1:544 முஸ்லிம் 1:378).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் காடைக் குருவியின் கூட்டைப் போன்று அல்லது அதை விடவும் சிறிதாக அல்லாஹ்வுக்காக ஒரு பள்ளியைக் கட்டுகிறாரோ அல்லாஹ் அவருக்கு சுவனத்தில் ஒரு வீட்டைக் கட்டுவான்." (இப்னுமாஜா 1:244).

## 14 - பாங்குக்குப் பதில் கூறுவது

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "பாங்கு கூறுபவர் (முஅத்தின்) அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று கூறும் போது உங்களில் ஒருவர் (அதே போன்று) அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று கூறி பின்னர் முஅத்தின் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறும் போது அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ் என்றும் முஅத்தின் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று கூறும் போது அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலல்லாஹ் என்றும் பின்னர் முஅத்தின் ஹய்ய அலஸ் ஸலாத் என்று கூறும் போது லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ் என்றும் பின்னர் முஅத்தின் ஹய்ய அலல் பலாஹ் என்று கூறும் போது லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ் என்றும் பின்னர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று கூறும் போது அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்றும் பின்னர் முஅத்தின் லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறும் போது லாஇலாஹ இல்லல்லாஹ் என்றும் தனது உள்ளத்தால் கூறினால் அவர் சுவனம் நுழைவார்." (முஸ்லிம் 1:289).

## 15- நோன்பு நோற்றல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "றமழான் மாதம் வந்து விட்டால் சுவன வாயில்கள் திறக்கப்படும். நரக வாயில்கள் மூடப்படும். ஷைத்தான்கள் விலங்கிடப்படும்". (புகாரி 4:122 முஸ்லிம் 2:758).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸஹ்ல் பின் ஸஃத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சுவனத்தில் ஒரு வாயில் உண்டு. அதற்கு 'ரய்யான்' என்று கூறப்படும். மறுமையில் அவ்வாயிலால் நோன்பாளிகள் நுழைவார்கள். வேறு யாரும் அதனால் நுழையமாட்டார்கள். நோன்பாளிகள் எங்கே என்று கேட்கப்படும். அப்போது அவர்கள் எழுந்து அதனால் நுழைவார்கள். வேறு யாரும் அதனால் நுழைய மாட்டார்கள். நோன்பாளிகள் நுழைந்து விட்டால் அவ்வாயில் மூடப்படும். பின்னர் அதனால் யாரும் நுழையமாட்டார்கள்." (புகாரி 4:122 முஸ்லிம் 2:808).

இமாம் புகாரியுடைய அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது: "சுவனத்தில் எட்டு வாயில்கள் உண்டு. அதில் 'ரய்யான்' என்று ஒரு வாயில் உண்டு. அதனால் நோன்பாளிகள் மாத்திரம் நுழைவார்கள்." இமாம் திர்மிதி அவர்கள் மேலதிகமாக இவ்வாறு அறிவித்துள்ளார்கள்: "அவ்வாயிலால்

நுழைந்தவர் என்றுமே தாகிக்கமாட்டார்.” (திர்மிதி 3:137).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹுதைபா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “யார் அல்லாஹ்வுக்காக ஒரு நாளில் நோன்பு நோற்றிருக்கும் போது அவருக்கு அந்நாள் இவ்வுலகின் கடைசி நாளாக ஆக்கப்பட்டு விடுகிறதோ, அவர் சுவனம் நுழைவார்.” (அஹ்மத் 5:391).

உமாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் நபியவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே நான் சுவனம் நுழைவதற்கு ஒரு அமலை எனக்குக் கூறுங்கள் என்று வேண்டிய போது “நீர் நோன்பு நோற்பீராக! ஏனெனில் அதற்கு நிகராக வேறு அமல் கிடையாது.” இதற்குப் பின் அபூ உமாமாவின் வீட்டில் விருந்தாளிகள் வந்தாலன்றி புகையைக் காண முடியாது. பகலில் அவரின் வீட்டில் புகையைக் கண்டால் அவர்களிடம் விருந்தாலி ஒருவர் வந்திருக்கிறார் என்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள்.”

### 16- ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “ஓர் உம்ரா மற்ற உம்ரா செய்வதற்கு இடையே நிகழும் பாவங்களுக்கு

பரிகாரமாகும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சுவனமன்றிக் கூலியில்லை." (புகாரி 3:597 முஸ்லிம் 2:983).

## 17 - ஜிஹாத்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "இறை பாதையில் ஜிஹாத் செய்வதற்காகவும், இறைவனின் வார்த்தைகளை உண்மைப்படுத்துவதற்காகவும் மாத்திரம்வெளியாகி-ய முஜாஹிதை சுவனத்தில் நுழைவிப்பதற்கு அல்லது ஃகனீமத் பொருளை அல்லது நற்கூலியை அடைந்தவராக அவர் வெளியாகிய அவரின் இல்லத்துக்கு மீட்டுவதற்கு அல்லாஹ் பொருப்பாகி விட்டான்." (புகாரி 1:92 முஸ்லிம் 3:1495).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக சுவனத்தில் நூறு தட்டுகள் உள்ளன. அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்யும் முஜாஹிதீன்களுக்கு அல்லாஹ் அவைகளை ஏற்பாடு செய்துள்ளான். ஒவ்வொரு தட்டுக்கும் இடையேயுள்ள தூரம் வானத்துக்கும், பூமிக்கும் இடையேயுள்ள தூரத்தைப் போன்றதாகும்." (புகாரி 6:11).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ அவ்பா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "வால்களின் நிழலுக்குக் கீழே சுவனம் இருக்கிறது." (புகாரி 6:33 முஸ்லிம் 3:1362).

## 18 - அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய்தாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் அல்லாஹ்வின் பாதையில் தன்னிடமுள்ள ஏதாவது பொருட்களில் இரண்டை செலவு செய்கிறாரோ அவர் "அல்லாஹ்வின் அடியானே இது உனக்கு சிறந்தது" எனக் கூறி சுவன வாயில்களில் அழைக்கப்படுவார். தொழுகையாளியாக இருந்தால் தொழுகையின் வாயிலால் அழைக்கப்படுவார். முஜாஹிதாக இருந்தால் ஜிஹாத் வாயிலால் அழைக்கப்படுவார். நோன்பாளியாக இருந்தால் 'றய்யான்' என்ற வாயிலால் அழைக்கப்படுவார். கொடையாளியாக இருந்தால் ஸதகா — தர்ம வாயிலால் அழைக்கப்படுவார். அப்போது அபூ பக்ர் (றழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே எனது தாயும், தந்தையும் உங்களுக்கு அர்ப்பனமாகட்டும். அவ்வாயில்களால் அவசியம் அழைக்கப்பட வேண்டியவர் அனைத்து வாயில்களாலும் அழைக்கப்படுவாரா? என்று கேட்ட போது "ஆம் நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்க நான்

ஆதரவு வைக்கிறேன்." என நபியவர்கள் கூறினார்கள். (புகாரி 4:111 முஸ்லிம் 2:711).

இப்னு அப்துல் பர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "யார் இரண்டை செலவு செய்கிறார்களோ" என்ற சொல்லின் கருத்து, இரண்டு திர்ஹம்கள், இரண்டு தீனார்கள், இரண்டு சட்டைகள் போன்ற ஒரே வகையில் இரண்டை செலவு செய்வது அல்லது இரு மிருகங்கள் மீது சுமந்து செல்வது அதன் பொருள் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "இரண்டை செலவு செய்தல்" என்பதன் பொருள் பொருட்களில் ஏதாவதொரு வகையில் இரண்டை செலவு செய்வதாகும்.

மேலும் கூறுகின்றார்கள்: "இறை பாதையில்" என்பதன் பொருள் அல்லாஹ்வின் கூலியை எதிர் பார்த்து செலவு செய்வதாகும். இது ஜிஹாத் மற்றும் ஏனைய வணக்கங்களுக்கும் பொதுவானதாகும்.

## 19 - தான தர்மம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹுதைபா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் அல்லாஹ்வுக்காக ஒரு தர்மத்தைச் செய்கின்ற போது அவருக்கு அது

இறுதி அமலாக ஆக்கப்பட்டு விடுகிறதோ அவர் சுவனம் நுழைவார்.” (அஹ்மத் 5:391).

## 20 - கஷ்டமானவருக்கு மனமிறங்குதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹுதைபா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “ ஒரு மனிதர் மரணித்து, சுவனம் நுழைந்த போது நீங்கள் என்ன அமல் செய்து வந்தீர்கள் என அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் நான் மக்களுக்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். அப்போது கஷ்டமான ஒருவர் வந்தால் அவரின் நிலையைக் கவனித்து பணத்தைக் குறைத்து விடுவேன். இதனால் அவரின் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. அபூ மஸ்ஊத் கூறுகின்றார்கள்: இதனை நபியவர்கள் கூறுவதை நான் செவியுற்றேன். (புகாரி 3451 முஸ்லிம் 3: 1195). இமாம் புகாரியிடம் இவ்வாறு வந்துள்ளது: “உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயங்களில் ஒருவரின் உயிரைக் கைப்பற்றுவதற்காக வானவர் வந்த போது நீர் ஏதேனும் நன்மை செய்திருக்கிறீரா என அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் எனக்குத் தெறியாது என்றார். நன்றாக சிந்தித்துப் பார் என அவருக்கு கூறப்பட்டது. அதற்கு அவர் நான் உலகத்தில் மக்களுக்கு வியாபாரம் செய்து வந்தேன். அப்போது அவர்களோடு நான் தாராள மனதுடன் நடந்து கொள்வேன். செல்வந்தருடன்

உரிய முறையில் நடந்து கொள்வேன். வறியவருக்கு மனமிறங்குவேன் என்று கூறினார். எனவே அவரை அல்லாஹ் சுவனத்தில் நுழைவித்தான்."

இமாம் நவவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: மனமிறங்குவது என்பதன் கருத்து, நிறப்பமாகக் கொடுப்பதிலும், பெறுமதியில் இலேசாகக் குறைந்து விட்டால் அதனை ஒப்புக் கொள்வதிலும் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்வதாகும். (ஷரகு ஸஹீஹ் முஸ்லிம் 10:483).

21 - மக்களுக்கு தொந்தரவு தருபவற்றை பாதையை விட்டும் அகற்றுவது.

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதை செவியுற்றேன்: "பாதையில் மக்களுக்கு இடைஞ்லாக இருந்த ஒரு மரத்தை வெட்டியதற்காக ஒரு மனிதர் சுவனத்தில் உள்ளாசமாகச் சுற்றுவதை நான் கண்டேன்." (முஸ்லிம் 4:2021 அபூதாவூத் 5:408). இமாம் அபூதாவூத் இதனை இவ்வாறு அறிவித்துள்ளார்கள்: "எந்த நன்மையும் செய்யாத ஒருவர் பாதையை விட்டும் முல் கிலையை அகற்றினார். மறத்தில் இருந்த முல் கிலையை வெட்டி அகற்றியிருப்பார். அல்லது பாதையில் போடப்பட்டிருந்த முல் கிலையை அகற்றியிருப்பார். இதற்கு நன்றிக்

கடனாக அல்லாஹ் அவரை சுவனத்தில் நுழைவித் தான்."

## 22 - மிருகங்களுக்கு நல்லறம் புரிதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "தாகத்தினால் ஈரமான மண்ணை சாப்பிடுகின்ற நாயைக் கண்ட ஒரு மனிதர் தனது காலுறையைக் கலற்றி (கிணற்றிலிருந்து) தண்ணீர் எடுத்து தாகம் தீரும் வரை அதற்கு நீர் புகட்டினார். இதற்கு நன்றிக் கடனாக அல்லாஹ் அவரை சுவனத்தில் நுழைவித்தான்." (புகாரி 1:278).

## 23 - அநாதையைப் பராமரித்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸஹ்ல் பின் ஸஃத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " நானும் அநாதையைப் பராமரிப்பவரும் சுவனத்தில் இவ்வாறு ஒன்றாக இருப்போம் என நபியவர்கள் தனது ஆட்காட்டி விரலையும், நடு விரலையும் விரித்துக் காட்டினார்கள்." (புகாரி 9: 439).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "தனது நெருங்கிய ஓர் அநா

தையையோ அல்லது பிறரின் அநாதையையோ பராமரிக்கின்றவரும் நானும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என இரு விரல்களால் சுட்டிக் காட்டினார்கள்." (முஸ்லிம் 4:2287).

இப்னுல் அஸீர் கூறுகின்றார்கள்: அநாதையைப் பராமரிப்பவர் என்றால் அதன் பணிகளை மேற் கொள்பவர், அதனை வளர்ப்பவர் ஆவார். "யதீம்" (அநாதை) என்ற அறபுப் பதம் மனிதர்களில் தந்தையை இழந்த ஒருவருக்கும், மிருகங்களில் தாயை இழந்த ஒன்றுக்கும் கூறப்படுகிறது.

மேலும் அவர்கள் கூறுகையில்: "தனக்குரிய அல்லது பிறருக்குரிய அநாதை" என்பதன் கருத்து, அநாதை தனது மகனின் மகன் போன்ற இரத்த பந்துக்களில் ஒருவராக அல்லது உறவினரல்லாத பிறரின் அநாதையாக இருந்தாலும் ஒரே கூலியே கிடைக்கும்.

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார் கள்: தனக்குரிய அநாதை என்றால் அதன் பாட்ட னாக அல்லது சிறிய தந்தையாக அல்லது சகோதரனாக அல்லது அது போன்ற உறவினர்க ளில் ஒருவராக இருப்பார். அல்லது குழந்தையின் தந்தை இறந்த பின் அவ்விடத்தை தாய் வகிப்பார்.

மேலும் கூறுகின்றார்கள்: நபியவர்களின் அந்தஸ்துக்கும், அநாதையைப் பராமரிப்பவரின்

அந்தஸ்துக்கும் இடையில் உள்ள வித்தியாசம் ஆல்காட்டி விரலுக்கும், நடு விரலுக்குமிடையில் உள்ள வித்தியாசத்தைப் போன்றதாகும் என்பதை இந்நபி மொழி சுட்டிக்காட்டுகிறது. இந்நபி மொழி கீழ் வரும் நபி மொழிக்கு ஒப்பானதாகும்: "இவ்விரு விரல்கள் நெருக்கமாக இருப்பதைப் போன்று மறுமை நாள் நெருங்கியிருக்க நான் நபியாக அனுப்பப்பட்டிருக்கிறேன்."

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நானே சுவனத்தின் வாயிலை முதலாவதாக திறப்பவன். எனினும் ஒரு பெண் என்னுடன் நுழைவதற்கு முற்படுவாள். அப்போது அவளிடம் நீ யார்? உனக்கு எவ்வாறு நுழைய முடியும் என நான் கேட்பேன். அதற்கு அவள் நான் எனக்குரிய அநாதைகளைப் பராமரித்த பெண்மணி எனப் பதில் கூறுவாள்." (அபூ யஃலா 12:7).

## 24- பெண் பிள்ளைகளை வளர்ப்பதும், அவர்களுக்காக செலவு செய்வதும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "பருவமடையும் வரை யார் இரு பெண் பிள்ளைகளுக்கு செலவு செய்கிறாரோ அவரும் நானும் மறுமையில் ஒன்றாக வருவோம்

என்று கூறி விட்டு தனது விரல்களை ஒன்று சேர்த்துக் காட்டினார்கள்." (முஸ்லிம் 4:2027).

திர்மிதி அவர்கள் இந்நபி மொழியை இவ்வாறு அறிவித்துள்ளார்கள்: "பருவமடையும் வரை இரு பெண் பிள்ளைகளை வளர்க்கின்றவரும் நானும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என நபியவர்கள் தனது இரு விரல்களால் சுட்டிக் காட்டினார்கள்." (4:281).

ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இரு பெண் பிள்ளைகளை சுமந்து கொண்டு ஒரு ஏழைப் பெண் என்னிடம் வந்தாள். நான் அவளுக்கு மூன்று பேரீத்தம் பழங்களைக் கொடுத்தேன். அதனைப் பெற்ற அவள் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு பேரீத்தம் பழத்தைக் கொடுத்து விட்டு ஒன்றை அவள் சாப்பிடுவதற்காக அவளின் வாய்க்கு உயர்த்திய போது அவளின் இரு பிள்ளைகளும் அதனைக் கேட்டனர். எனவே அவள் சாப்பிட விரும்பிய அப்பேரீத்தம் பழத்தை இரு பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுத்தாள். அவளின் செயல் என்னை ஆச்சரியப்படுத்தியது. இதனை நான் நபியவர்களிடம் கூறிய போது "நிச்சயமாக அல்லாஹ் அவளுக்கு இதன் மூலம் சுவனத்தை நிச்சயப்படுத்தி விட்டான். அல்லது அவளை நரகத்திலிருந்து விடுதலை செய்து விட்டான்." என நபியவர்கள் கூறினார்கள்: (முஸ்லிம் 4:2027)

இந்நபி மொழி மற்றொரு சொல்லில் இவ்வாறு வந்துள்ளது: ஆஇஷா (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்:" இரு பெண் பிள்ளைகளுடன் ஒரு பெ்ண் என்னிடம் வந்து யாசகம் கேட்டாள். ஒரு பேரீத்தம் பழத்தைத் தவிர வேறு எதுவும் என்னிடம் இருக்கவில்லை. எனவே அதனை அவளுக்கு கொடுத்தேன். அப்பெண் அதனை எடுத்து தனது இரு பெண் பிள்ளைகளுக்கும் பிரித்துக் கொடுத்தாள். அவள் அதிலிருந்து எதனையும் சாப்பிடவில்லை. பின்னர் அவளும் பிள்ளைகளும் எழுந்து சென்றனர். நபியவர்கள் என்னிடம் வந்த போது அவளின் சம்பவத்தைக் கூறினேன். அதற்கு நபியவர்கள்: " பெண் பிள்ளைகளினால் சோதனை ஏதும் வரும் போது எவர் அவர்களுக்கு நல்லறம் செய்கிறாரோ அவருக்கு அவரின் பிள்ளைகள் நரகத்தில் நுழைவதை விட்டும் தடுப்பாக இருப்பார்கள் என்று கூறினார்கள்." (புகாரி 10:426 முஸ்லிம் 4:2027).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யாருக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருந்து, அவர்களுக்கு இருப்பிடம் கொடுத்து அவர்கள் மீது கருணை காட்டி அவர்களைப் பராமரிக்கிறாரோ அவருக்கு சுவனம் நிச்சயமாகி விட்டது. அல்லாஹ்வின் தூதரே இரு பெண் பிள்ளைகள் இருந்தால் என்னவென நபியவர்

களிடம் கேட்கப்பட்ட போது இரு பெண் பிள்ளை கள் இருந்தாலும் அவ்வாறு தான் என்றார்கள். அங்கு குழுமியிருந்தோரில் சிலர் கருதினர் ஒரு பெண் பிள்ளை இருந்தாலும் இவ்வாறு கூலி தானா என நபியவர்களிடம் கேட்டிருந்தாலும் ஒரு பெண் பிள்ளைக்கும் இவ்வாறுதான் எனக் கூறியி ருப்பார்கள்." (அஹ்மத் 3:303).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: "யார் இரு பெண் பிள்ளைகளை அல்லது இரு சகோதரிகளை அல்லது மூன்று சகோதரிகளை மரணிக்கும் வரையில் அல்லது அவர்களை விட்டும் அவர் மரணிக்கும் வரையில் மற்றொரு அறிவிப்பில் (அவர்கள் பருவ வயதை அடையும் வரையில்) பராமரிக்கிறாரோ அவரும் நானும் சுவனத்தில் இவ்வாறு இருப்போம் என நபியவர்கள் ஆல்காட்டி விரலாலும் நடு விரலாலும் சுட்டிக் காட்டினார்கள்." (அபூ யஃலா 6:166).

## 25 - நற்பண்பு

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார் கள்: "மனிதர்களை அதிகமாக சுவனத்தில் நுழை விக்கும் நல்லமல் பற்றி கேட்கப்பட்ட போது இறையச்சமும், நற்பண்பும் எனக் கூறினார்கள். மேலும் மக்களை அதிகமாக நரகத்தில் நுழைவிப்ப

வை பற்றி கேட்கப்பட்ட போது நாவும், மர்மஸ்தானமும் எனக் கூறினார்கள்." (திர்மிதி 4:319).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "தர்க்கம் புரிவதற்கு தகுதியிருந்தும் அதனை விட்டவருக்கு சுவனத்துக்குச் சூழால் உள்ள மாலிகையை வழங்க நான் பொருப்பாக இருக்கிறேன். பரிகாசமாக இருப்பினும் பொய் கூறுவதை விட்டவருக்கு சுவனத்தின் மத்தியில் உள்ள மாலிகையை வழங்க நான் பொறுப்பாக இருக்கிறேன். தனது பண்பை நற்பண்பாக ஆக்கிக் கொண்டவருக்கு சுவனத்தின் மேல் உள்ள மாலிகையை வழங்க நான் பொருப்பாக இருக்கிறேன்."

## 26- தர்க்கம் புரிவதை விட்டு விடல்

இதற்கு முன் கூறப்பட்ட அபூ உமாமா (றழி) அவர்களின் நபி மொழி சான்றாகும்.

## 27- உண்மையை உரைப்பதும், பொய் பேசாமையும்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக உண்மை நன்மையின் பக்கம் வழி காட்டுகிறது. நன்மை சுவனத்தின் பால் வழி காட்டுகிறது. நிச்சயமாக உண்மையாள

ராக ஆகும் வரை ஒருவர் உண்மை கூறிக் கொண்டே இருப்பார். நிச்சயமாக பொய் தீமையின் பால் வழிகாட்டுகிறது. தீமை நரகத்தின் பால் வழி காட்டுகிறது. அல்லாஹ்விடத்தில் பொய்யன் என எழுதப்படும் வரை ஒருவர் பொய் கூறிக் கொண்டே இருப்பார். " (புகாரி 10:507 முஸ்லிம் 4:2012).

## 28 - நாவையும், மர்மஸ்தானத்தையும் பாதுகாத்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸஹ்ல் பின் ஸஃத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " யார் தனது இரு எழும்புகளுக்கிடையில் உள்ள (நாவையும்), இரு நாடிகளுக்கிடையில் உள்ள (மர்மஸ்தானத்தையும்) பாதுகாத்துக் கொள்வதாக உத்தராவதமளிக்கிறாரோ அவருக்கு நான் சுவனத்தை உத்தரவாமளிக்கிறேன்." மற்றொரு சொல்லில் இவ்வாறு வந்துள்ளது: "யார் தனது இரு நாடிகளுக்கிடையில் உள்ள நாவையும், இரு கால்களுக்கிடையில் உள்ள மர்மஸ்தானத்தையும் பாதுகாப்பதாக பொருப்பேற்கிறாரோ அவருக்கு சுவனம் கிடைப்பதற்கு நான் பொருப்பாக இருக்கிறேன்." (புகாரி 11:308).

இந்நபி மொழிக்கு விளக்கம் கூறும் போது இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவசியமானவற்றைப் பேசுவது அல்லது தேவையில் லாதவற்றைப் பேசாமல் விடுவது மூலம் தனது நாவின் மீதுள்ள உரிமையை நிறைவேற்றுபவர் மற்றும் தனது மர்மஸ்தானத்தை ஹலாலானவற்றுக் கு உபயோகித்து, ஹராமானவற்றை விட்டும் தவிர்த்துக் கொள்வது மூலம் அதன் உரிமையை நிறைவேற்றுபவரும் ஆவார்.

29 - **கோபத்தின் போது அதனை அடக்குவதும், கோபப்படாமல் இருப்பதும்.**

அபுத் தர்தா∴ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார் கள்: " சுவனத்தில் நுழைவிக்கும் ஒரு அமலை எனக்குக் கூறுங்கள் என ஒரு மனிதர் நபியவர்களி டம் கேட்டார். அதற்கு நபியவர்கள் நீர் கோபப்படா தீர்! உமக்கு சுவனம் உண்டு என்றார்கள்." (தபரானி, தர்∴கீப் வத்தர்ஹீப் 3:277).

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: "எனக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் என நபியவர்களிடம் ஒரு மனிதர் கேட்ட போது நீ கோபப்படாதே! என்று கூறினார்கள். மீண்டும் மீண்டும் உபதேசிக்குமாறு வேண்டிய போது "நீ கோபப்படாதே!" என்று கூறினார்கள். (புகாரி 10:519).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக முஆத் பின் அனஸ் அல் ஜுஹனீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "கோபத்தை

தீர்த்துக்கொள்ள முடியுமாயிருந்தும் எவர் அதனை அடக்குகிறாரோ அவரை அல்லாஹ் மறுமையில் படைப்பினங்களின் முன்னிலையில் அழைத்து, அவர் விரும்பிய ஹூருல் ஈன் பெண்ணைத் தெரிவு செய்யுமாறு கூறுவான்" (அபூதாவூத் 5:137 திர்மிதி 4:326).

## 30 - பொறாமை, குரோதமற்ற உள்ளம்

அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் அமர்ந்திருக்கும் போது "சுவனவாசிக ளில் ஒருவர் இப்போது உங்களிடம் வருவார்" என நபியவர்கள் கூறினார்கள். அப்போது அன்ஸாரிக ளில் ஒருவர் வந்தார். வுழு செய்த நீர் அவரின் தாடியிலிருந்து வடிந்து கொண்டிருந்தது. அவரின் இடது கையில் அவரின் இரு பாதனிகளையும் வைத்திருந்தார். அடுத்த நாள், "சுவனவாசிக ளில் ஒருவர் இப்போது உங்களிடம் வருவார்" என நபியவர்கள் கூறினார்கள். அப்போது அதே மனிதர் முன்பு போன்று வந்தார். அடுத்த நாள் "சுவனவாசிகளில் ஒருவர் இப்போது உங்களிடம் வருவார்" என நபியவர்கள் கூறினார்கள். அப்போது அதே மனிதர் முன்பு போன்று வந்தார். நபியவர்கள் எழுந்து சென்ற பின் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல் ஆஸ் (றழி) அவர்கள்

அம்மனிதரைத் தொடர்ந்து சென்று நிச்சயமாக நான் எனது தந்தைக்கு தூற்றி விட்டு, மூன்று இரவுகள் அவரிடம் வருவதில்லை என சத்தியம் செய்து விட்டேன். எனவே எனது சத்தியத்தை நிறைவேற்றுவதற்காக உங்களிடம் தங்கலாமா எனக் கேட்ட போது ஆம் தங்கலாம் என்றார். ஹதீஸ் அறிவிப்பாளர் அனஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல் ஆஸ் (றழி) அவர்கள் தனக்குக் கூறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அம்மனிதருடன் ஒரு இரவு அல்லது மூன்று இரவுகள் தங்கினார் கள். ஆனால் இரவில் எழுந்து வணக்கம் புரிவதை அவர் காணவில்லை. அவர் படுக்கைக்குச் செல்லும் போது அல்லாஹ்வை திக்ர் செய்து, தக்பீர் கூறுவார். பின்னர் பஜ்ர் தொழுகைக்கு எழுந்து வுழூ செய்வார். அத்துடன் அவர் நல்லவற் றைத் தவிர வேறு எதனையும் கூறுவதை கேட்க வில்லை. இதனைத் தவிர அவரிடம் மேலதிகமாக எதனையும் காணவில்லை. மூன்று இரவுகள் கடந்த போது அவரின் அமலை குறைவாகக் கருத முற்பட்டேன். பின்னர் அவரிடம் விவரத்தைக் கூறினேன். அப்துல்லாஹ்வே எனக்கும் என் தந்தைக்கும் இடையில் வெறுத்து ஒதுக்குமளவு கோபம் ஏதும் ஏற்படவில்லை. எனினும் மூன்று அமர்வுகளில் மூன்று முறை நபியவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். "சுவனவாசிகளில் ஒருவர்

இப்போது உங்களிடம் வருவார்” அம்மூன்று முறையும் நீங்களே வந்தீர்கள். எனவே உங்களி டம் தங்கி உங்களின் அமலை பார்வையிட விரும்பி னேன். ஆனால் உங்களிடம் பெரிய அமல் எதனை யும் காணவில்லை. நபியவர்கள் கூறிய (சுவனவாசி) என்ற நிலையை எவ்வாறு அடைந்தீர் கள்? அதற்கு அம்மனிதர் நீங்கள் பார்த்த அமல்க ளைத் தவிர வேறு எதுவும் கிடையாது என்றார். நான் அவரை விட்டும் பிரிந்து திரும்பி வரும் போது என்னை அழைத்து நீங்கள் பார்த்த அமல்களைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால் முஸ்லிம்க ளில் எவரைப் பற்றியும் எனது உள்ளத்தில் குரோதம் கிடையாது. அல்லாஹ் ஒருவருக்குச் செய்த அருளுக்காக அவர் மீது நான் பொறாமைப் படுவதில்லை. இதனைக் கேட்ட அப்துல்லாஹ் பின் அம்ர் அவர்கள் இப்பண்பால் தான் அவ்வுயர் நிலை யை அடைந்து கொண்டீர்கள். அதனைத்தான் எம்மால் செய்யவும் முடியாது என்று கூறினார்கள்.” (அஹ்மத் 3:166).

## 31 - மக்களின் அழகிய புகழ்

அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “ஒரு ஜனாஸா எடுத்துச் செல்லப்பட்ட போது அதன் நலவு பற்றி மக்கள் புகழ்ந்து கூறினர். அப்போது நபியவர்கள் “அவசியமாகி விட்டது, அவசியமாகி விட்டது, அவசியமாகி விட்டது” எனக்

கூறினார்கள். மற்றொரு ஜனாஸா எடுத்துச் செல்லப்பட்ட போது அதன் தீமைகள் பற்றி மக்கள் கதைத்தனர். அப்போது நபியவர்கள் "அவசியமாகி விட்டது, அவசியமாகி விட்டது, அவசியமாகி விட்டது" எனக் கூறினார்கள். இது பற்றி நபியவர்களிடம் உமர் (றழி) அவர்கள் கேட்ட போது, "நீங்கள் எவரைப் பற்றி புகழ்ந்தீர்களோ அவருக்கு சுவனம் அவசியமாகி விட்டது. மேலும் எவரைப் பற்றி இகழ்ந்தீர்களோ அவருக்கு நரகம் அவசியமாகி விட்டது. நீங்கள் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள். நீங்கள் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள். நீங்கள் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள் என நபியவர்கள் கூறினார்கள்." (புகாரி 3:228 முஸ்லிம் 2:655).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எந்த ஒரு முஸ்லிமுக்கு நான்குபேர் நற்சான்று பகர்கிறார்களோ அவரை அல்லாஹ் சுவனத்தில் நுழைவிப்பான். அப்போது நாங்கள் மூன்று பேர் நற்சான்று பகர்ந்தாலுமா? எனக் கேட்டோம். அதற்கு நபியவர்கள் மூன்று பேர் நற்சான்று பகர்ந்தாலும் அவ்வாறுதான் என்றார்கள். இரண்டு பேர் நற்சான்று பகர்ந்தாலுமா? எனக் கேட்ட போது இரண்டு பேர் நற்சான்று பகர்ந்தாலும் தான் என்றார்கள். பின்னர் ஒருவது

சான்று பற்றி நாம் நபியவர்களிடம் கேட்க வில்லை." (புகாரீ2:229).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சுவனவாசிகள் யாரெனில் அவர்கள் கேட்கும் போது மக்களின் நற் புகழ்ச்சியால் அவர்களின் இரு காதுகளையும் அல்லாஹ் நிறப்பியிருப்பான். நரகவாசிகள் யாரெனில் அவர்கள் கேட்கும் போது அவர்களின் இரு காதுகளையும் மக்களின் இகழ்ச்சியால் அல்லாஹ் நிறப்பியிருப்பான்" (இப்னு மாஜா 2:1412).

## 32 - பெற்றோர் நலம் பேணல்

அபூ ஹுறைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார் கள்: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: "(நரகத்தில்) முகம் குப்புர விழட்டும், முகம் குப்புர விழட்டும், முகம் குப்புர விழட்டும்" என நபியவர்கள் கூறிய போது அல்லாஹ்வின் தூதரே! அவர் யாரென கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் "யார் தனது இரு பெற்றோர்களையும் அல்லது அவர்களில் ஒருவரை வயோதிபத்தின் போது அடைந்து, பின்னர் சுவனம் நுழையாதவர் என நபியவர்கள் கூறினார்கள்." (முஸ்லிம் 4:1978).

அபூ தர்தாஃ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: "தந்தை சுவன வாயில்களில் நடு வாயிலாகும். நீ நாடினால் அவ்வாயிலை நீக்கி விடு. நாடினால் அதனை பேணிப் பாதுகாத்துக் கொள்." (திர்மிதி 4:245).

பஃகவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: சுவன வாயில்களில் நடு வாயில் என்பது சிறந்த வாயிலாகும்.

முஆவியா பின் ஜாஹமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஜாஹமா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே நான் இறை பாதையில் போராட விரும்பி, உங்களிடம் ஆலோசனை கேட்க வந்திருக்கிறேன் என்றார்கள். அதற்கு நபியவர்கள் உனது தாய் இருக்கிறாளா என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்றார். அப்படியாயின் அவளுடனேயிரு! ஏனெனில் சுவர்க்கம் தாயின் இரு பாதங்களுக்குக் கீழால் இருக்கிறது என்றார்கள் நபியவர்கள்." (3:429).

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது: உனது இரு பெற்றோர்களும் இருக்கிறார்களா? என நபியவர்கள் கேட்ட போது நான் ஆம் இருக்கிறார்கள் என்றேன். அப்படியாயின் அவர்கள் இருவருடன் இருப்பீராக! ஏனெனில் சுவர்க்கம் அவர்களின்

பாதங்களுக்குக் கீழால் இருக்கிறது.” (தபரானி 2:325).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “இறைவனின் பொருத்தம் தந்தையின் பொருத்தத்திலும், இறைவனின் கோபம் தந்தையின் கோபத்திலும் உள்ளது.” (திர்மிதி 4:274).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நான் சுவனத்தில் நுழைந்த போது திருமறை ஓதும் சத்தத்தைக் கேட்டு, ஓதுபவர் யார் எனக் கேட்டேன். அதற்கு ஹாரிஸா பின் நுஃமான் எனக் கூறினார்கள். இதனைக் கேட்ட நபியவர்கள் நல்லுபகாரம் செய்வதன் பிரதிபலன் இவ்வாறு தான். நல்லுபகாரம் செய்வதன் பிரதிபலன் இவ்வாறுதான் எனக் கூறினார்கள்.” (ஹாகிம் 3:208).

மற்றொரு அறிவிப்பிவல் இவ்வாறு வந்துள்ளது: நான் தூங்கிக் கொண்டிருக்கும் போது என்னை சுவனத்தில் இருப்பதாகக் கண்டேன். அங்கே ஓதுகின்ற ஒருவரின் ஓசையைக் கேட்டு, இது யார் எனக் கேட்ட போது ஹாரிஸா பின் நூஃமான் எனக் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் நல்லறம் செய்வதன் பிரதிபலன் இவ்வாறு தான். நல்லறம் செய்வதன் பிரதிபலன் இவ்வாறு தான் எனக் கூறி

விட்டு, ஹாரிஸா அவர்கள் தனது தாய்க்கு மிகவும் நல்லுபகாரம் செய்பவர்களாக இருந்தார்கள் எனக் கூறினார்கள். ” (அஹ்மத் 6:151).

## 33 -தந்தை தனது பிள்ளைக்காக பாவமன்னிப்புத் தேடுதல்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “ நிச்சயமாக ஒரு மனிதனுக்கு சுவனத்தில் அவரின் அந்தஸ்த்து உயர்த்தப்படும். அப்போது அவர் இது எவ்வாறு எனக் கேட்பார். உனது பிள்ளை உனக்கு பாவமன்னிப்புக் கேட்பதால் இவ்வாறு உயர்த்தப்படுகிறது என்று அவருக்கு கூறப்படும்.” (அஹ்மத் 2:509).

## 34- நோயாளியைத் தரிசித்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸவ்பான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “நோயாளியைத் தரிசிப்பவர் சுவன வழியில் இருக்கிறார்”. மற்றொரு அறிவிப்பில்“ யார் நோயாளியைத் தரிசிக்கச் செல்கிறாரோ அவர் திரும்பும் வரை சுவன வழியில் இருக்கிறார்” என்று வந்துள்ளது. மற்றொரு அறிவிப்பில் “அவர் சுவன வழியில் இருந்துகொண்டே இருக்கிறார்” என

நபியவர்கள் கூறிய போது அல்லாஹ்வின் தூதரே! சுவன வழி என்றால் என்னவென கேட்கப்பட்ட போது சுவனத்தின் தோப்புகள் எனக் கூறினார்கள்." (முஸ்லிம் 4:1989).

அலீ பின் அபீ தாலிப் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைச் செவியுற்றேன்: "எந்தவொரு முஸ்லிம் நோயுற்ற ஒரு முஸ்லிமை காலையில் தரிசிக்கிறாரோ அவருக்காக எழுபதாயிரம் மலக்குகள் மாலை வரையில் பிரார்த்திக்கின்றனர். மேலும் பறிப்பதற்காக ஒரு பழமும் சுவனத்தில் அவருக்காக உண்டு!"( திர்மிதி3:300).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் ஒரு நோயாளியை அல்லது இஸ்லாமியச் சகோதரனை தரிசிக்கிறாரோ அவரை ஓர் அழைப்பாளர் (வானவர்) அழைத்து, நீர் நல்லறத்தை செய்து விட்டீர். உனது நடையும் நல்லறத்துக்காக ஆகி விட்டது. மேலும் நீர் சுவனத்தில் ஓர் இருப்பிடத்தை எடுத்துக் கொண்டு விட்டீர்! என்று கூறுவார். (இப்னுமாஜா 1:464).

### 35- முஸ்லிம் சகோதரர்களைத் தரிசிப்பது

இதற்கு முன்கூறப்பட்ட அபூ ஹுரைரா (றழி) அவர்களின் ஹதீஸ் சான்றாக உள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "உங்களில் சுவன மனிதர்களை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என நபியவர்கள் கேட்ட போது ஆம் அல்லாஹ்வின் தூதரே எங்களுக்கு அறிவியுங்கள் என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள்: நபி சுவனத்தில் இருப்பார். உண்மையாளரும் சுவனத்தில் இருப்பார். பட்டினத்தின் தொலைவில் உள்ள சகோதரனை அல்லாஹ்வுக்காக தரிசிக்கச் செல்பவரும் சுவனத்தில் இருப்பார் எனக் கூறினார்கள்" (தபரானி 1:46).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எந்தவொரு அடியான் அல்லாஹ்வுக்காக தனது சகோதரனை தரிசிக்கச் செல்கிறாரோ அவரை வானத்திலிருந்து ஓர் அழைப்பாளர் அழைத்து, நீர் நல்லதை செய்து விட்டீர். நீர் உயர் சுவர்கத்தை அடைந்து கொண்டு விட்டீர். அல்லது அல்லாஹ் தனது அர்ஷ் - அரசாட்சியில் இருந்தவாறு கூறுவான்: எனக்காக எனது அடியான் (தனது சகோதரனை) தரிசித்தான். நான் அவருக்காக விருந்தளிக்க வேண்டும். எனவே சுவனத்தைத் தவிர வேறு எக்கூலியையும் அல்லாஹ் அவருக்காக பொருந்திக் கொள்ளவில்லை." (பஸ்ஸார் 2:388).

**36- குழந்தைகள் மற்றும் அவர்களல்லாத நேசத்துக்குரியவர்களை இழந்ததில் பொறுமை செய்வது.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "உலகத்தில் எனது இறைவிசு--வாசியான அடியானின் நேசத்துக்குரிய ஒருவரின் உயிரைக் கைப்பற்றி, இறை கூலியை எதிர்பார்த்து அதில் பொறுமை செய்தால் அவருக்கு சுவனத்தைத் தவிர வேறு கூலியில்லை." (11:241).

ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: "நேசத்துக்குரியவர்" என்றால் குழந்தை, சகோதரன் போன்ற மனிதன் நேசிக்கின்ற ஒவ்வொருவருமாகும்.

மேலும் அவர்கள் கூறுகையில், ஒரு குழந்தையை இழந்தவர் மூன்று மற்றும் இரண்டு குழந்தைகளை இழந்தவர்களுடன் (நற்கூலியில்) சேர்ந்து கொள்கிறார் என்பதற்கு இப்னு பத்தால் அவர்கள் இந்நபி மொழியைக் ஆதாரமாகக் கொள்கிறார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மனிதர்களில் எந்தவொரு முஸ்லிமின் பருவ வயதை அடையாத மூன்று குழந்தைகள் மரணிக்கிறார்களோ அல்லாஹ் அவர்கள் மீது கொண்ட கிருபையினால் அம்மனிதரை சுவனத்தில் நுழைவிக்கிறான்." (புகாரி 3:118).

மற்றொரு அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது: "மூன்று குழந்தைகளை இழந்த பின் எவர் அதில் பொருமை செய்கிறாரோ அவர் சுவனம் நுழைவார். அப்போது ஒரு பெண் எழுந்து, இரு பிள்ளைகளை இழந்தவருக்கும் அக்கூலி தானா எனக் கேட்க "அல்லது இரு பிள்ளைகளை இழந்தவருக்கும் அவ்வாறு தான்" என்றார்கள். அப்போது அப்பெண் ஒரு பிள்ளையை இழந்தவருக்கு இக்கூலி உண்டா என்று நபியவர்களிடம் கேட்டிருக்க வேண்டாமா என்றாள். (நஸாஈ).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில அன்ஸாரிப் பெண்களுக்குக் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " உங்களில் ஒருவருடைய மூன்று குழந்தைகள் மரணித்து, அதில் பொருமை செய்தால் அவள் சுவனம் நுழைவாள். அப்போது அவர்களில் ஒரு பெண் அல்லாஹ்வின் தூதரே அல்லது இரு பிள்ளைகளை இழந்தவருக்கும் அக்கூலிதானா எனக் கேட்க இரு பிள்ளைகளை இழந்தவருக்கும் அதே கூலி உண்டு என்றார்கள் நபியவர்கள். (முஸ்லிம் 4:2028).

அபூ ஹஸ்ஸான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது இரு ஆண் பிள்ளைகள் மரணித்து விட்டனர். எனவே இவர்கள் பற்றி எமது உள்ளத்

துக்கு மகிழ்ச்சி தரும் ஏதாவது நபி மொழியை தாங்கள் கூறுவீர்களா என அபூ ஹுரைரா (றழி) அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம் சிறு குழந்தையாக இருக்கும் போது மரணித்தோர் சுவனத்தின் சிட்டுக்களாக இருப்பார்கள். அவர்க ளில் ஒருவர் தனது தந்தையை அல்லது பெற்றோ ரை சந்திப்பார். நான் உனது ஆடையின் ஓரத்தைப் பிடிப்பது போன்று அவர் தனது தந்தை யின் பிடவையை அல்லது கையைப் பிடித்து சுவனம் வரையில் சென்று, அல்லாஹ் அவரையும் அவரின் தந்தையையும் சுவனத்தில் நுழைவிப் பான்." (முஸ்லிம் 4:2029).

முஆவியா பின் குர்ரா (றழி) அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஒருவர் தனது மகனுடன் நபியவர்களிடம் வந்தார். அவரைப் பார்த்து நபியவர்கள் நீங்கள் அவரை நேசிக்கின்றீர்களா, எனக் கேட்டார்கள். அதற்கு அவர் நான் அவரை (எனது மகனை) நேசிப்பது போன்று அல்லாஹ் உங்களை நேசிப்பானாக என்று கூறினார். அப்பிள்ளை இறந்த பின் நபியவர் களிடம் அதுபற்றி கேட்ட போது, "நீர் சுவனத்தில் எந்த வாயிலால் சென்றாலும் அங்கே உனக்காக அப்பிள்ளை கதவு திறக்க முயன்று கொண்டிருப்ப தைப் பார்க்க உனக்கு மகிழ்ச்சியளிக்கவில்லையா என்று கேட்டார்கள்." (நஸயி 4:22-23).

உத்பா பின் அப்த் அஸ்ஸுலமீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: "எந்தவொரு முஸ்லிமின் பருவ வயதை அடையாத மூன்று குழந்தைகள் மரணிக்கிறார்களோ அவர்கள் அவர் விரும்பிய எட்டு சுவன வாயில்களில் எதிலாவது அவரை சந்திப்பார்கள்." (இப்னுமாஜா 1:512).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல்அஷ்அரீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஒரு அடியானின் குழந்தை மரணித்து விட்டால் அல்லாஹ் தனது மலக்குமார்களிடம்: எனது அடியானின் குழந்தையின் உயிரைக் கைப்பற்றி விட்டீர்களா என்று கேட்பான். அதற்கு அவர்கள் ஆம் என்று கூறுவார்கள். அவனின் இதயக் கனியைப் பறித்து விட்டீர்களா! என்று இறைவன் கேட்பான். அதற்கு அவர்கள் ஆம் என்று கூறுவார்கள். அப்போது இறைவன் எனது அடியான் என்ன கூறினான் என்று கேட்பான். அதற்கு மலக்குமார்கள் அவ்வடியான் உன்னைப் புகழ்ந்து, உன்னிடம் மீண்டான் என்று கூறுவார்கள். அப்போது இறைவன்: எனது அடியானுக்கு சுவனத்தில் ஒரு வீட்டைக் கட்டுங்கள். அதற்கு 'புகழ் வீடு' எனப் பெயரிடுங்கள் என்று கூறுவான்" (திர்மிதி 3:341).

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக முஆத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எனது ஆத்மா எவனின் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக தனது சிசு இறந்ததற்காக தாய் பொறுமை செய்தால் அவளை அந்தச் சிசு சுவனத்துக்கு அழைத்துச் செல்லும்." (அஹ்மத் 5:244)**

## 37- கஷ்டங்களில் பொறுமை செய்தல்

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நரகம் ஆசைகளால் மறைக்கப்பட்டுள்ளது. சுவனம் கஷ்டங்களால் மறைக்கப்பட்டுள்ளது." (புகாரி 6487 முஸ்லிம் 2823).**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; "சுவனம் கஷ்டங்களாலும், நரகம் ஆசைகளாலும் சூழப்பட்டுள்ளது." (முஸ்லிம் 2822).

இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்நபி மொழியில் கஷ்டம் என்பதன் கருத்து கடமையைச் செய்வதிலும், பாவச் செயல்களை விடுவதிலும் உள்ளத்தோடு போராடுவதாகும். வணக்கங்களை உரியமுறையில் நிறைவேற்றி, அதில் பேணுதலாக இருப்பதும், சொல்லிலும் செயலிலும் தடுக்கப்பட்டவைகளை விட்டும் தவிர்ந்துகொள்வதும்

போன்றாகும். இவ்வாறு நடந்துகொள்வது கஷ்டமாக இருப்பதால் கஷ்டங்கள் என்ற சொல் இவைகளுக்கு கூறப்பட்டுள்ளது. சோதனையில் பொறுமை செய்வதும், அதில் இறை கட்டளைக்கு சரணடைவதும் அவற்றில் உள்ளதாகும். அதாவது சிரமங்களை மேற்கொள்வதன் மூலம் சுவனத்துக் கும், ஆசைகளை தீர்த்துக் கொள்வதன் மூலம் நரகத்துக்கும் நுழையலாம் என்பதாகும். சுவன மும், நரகமும் இவ்வாறு மறைக்கப்பட்டுள்ளது. திரையைக் கிழிப்பவர் அதில் நுழைந்துகொள்கிறார். (பத்ஹுல்பாரி ).

## 38- சோதனை வந்தவுடன் பொறுமை செய்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அல்லாஹ் கூறுவான்: ஆதமின் மகனே சோதனை வந்தவுடன் நீ பொறு மை செய்து, நற்கூலியை எதிர்பார்த்தால் சுவனத் தைத் தவிர வேறு எக்கூலியையும் நான் உனக்குப் பொருந்திக்கொள்ளவில்லை."(இப்னுமாஜா 1:509).

## 39- கண்பார்வையை இழந்ததில் பொறுமை செய்தல்.

அனஸ் (றழி) அறிவிக்கின்றார்கள். நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: " எனது அடியானின் இரு

கண்பார்வையையும் போக்கி அவனை சோதித்து, அதில் பொறுமை செய்தால் இரு கண்களுக்கும் பகரமாக அவனுக்கு சுவனத்தை வழுங்குவேன்." (புகாரி 10:116).

## 40- மயங்கி விழுவதில் பொறுமை செய்தல்

அதாஃ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: சுவனவாசிகளில் ஒரு பெண்ணை உங்களுக்கு காண்பிக்கட்டுமா? என இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் என்னிடம் கேட்ட போது நான் ஆம் என்றேன். அப்போது அவர்கள் இந்தக் கருப்புப் பெண் நபியவர்களிடம் வந்து, நான் மயங்கி விழுகிறேன். எனது அவ்ரத்தும் வெளிப்படுகிறது. எனவே எனது ஆரோக்கியத்துக்கு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுங்கள் என வேண்டினாள். அதற்கு நபியவர்கள்: "நீ நாடினால் பொறுமை செய்வாயாக! உனக்கு சுவனம் உண்டு. நீ நாடினால் உனது ஆரோக்கியத்திற்காக அல்லாஹ் விடம் பிரார்த்திக்கிறேன்" என்றார்கள். அதற்கு அப்பெண் நான் பொறுமை செய்கிறேன். நான் நிர்வானமாகாமலிருக்க அல்லாஹ்விடம் பிரார்த்த னை செய்யுங்கள் என வேண்டினாள். நபியவர்கள் அவளுக்காக பிரார்த்தனை செய்தார்கள்." (புகாரி 10:114 முஸ்லிம் 4:1994).

## 41- மனைவி கணவனுக்குக் கட்டுப்படல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " ஒரு பெண் ஐவேளைத் தொழுகையைத் தொழுது றமழான் மாதத்தில் நோன்பு நோற்று தனது மர்மஸ்தானத்தைப் பாதுகாத்து கனவனுக்கும் கட்டுப்படால் அவள் விரும்பிய வாயிலால் சுவனத்துக்கு நுழைவாள்." (இப்னு ஹிப்பான் 315).

ஹுஸைன் பின் முஹ்ஸின் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அவர்களின் தந்தையின் சகோதரி நபியவர்களிடம் ஒரு தேவைக்காக வந்து தேவையை முடித்த பின் உனக்கு கனவன் உண்டா என நபியவர்கள் அவளிடம் கேட்டார்கள். அதற்கு அவள் ஆம் என்றாள். நீர் அவருடன் எவ்வாறு நடந்து கொள்கிறாய் என்பதைக் கவனித்துப் பார். நிச்சயமாக அவர் தான் உனது சுவனமும், நரகமும் என்று கூறினார்கள்." (அஹ்மத் 4:341).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "உங்கள் பெண்களில் சுவனப் பெண்கள் யார் என உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என நபியவர்கள் கேட்ட போது ஆம் அல்லாஹ்வின் தூதரே எங்களுக்கு அறிவியுங்கள் என்று கூறினார்கள். குழந்தையை அதிகமாகப் பெறுகின்ற, அதிகம்

அன்பு வைக்கின்ற ஒவ்வொரு பெண்ணும் ஆகும். அவள் கோபமடைந்தால் அல்லது அவளுக்கு தீங்கிழைக்கப்பட்டால் அல்லது கனவன் அவள் மீது கோபமடைந்தால் எனது கரம் உனது கரத்தில் உள்ளது. நீர் என்னை பொருந்திக் கொள்ளும் வரை நான் கண் இமைக்கமாட்டேன் என்று கூறுவாள்." (தபரானி 1:46).

இதற்கு கஃப் பின் உஜ்ரா (றழி) அவர்கள் மற்றொரு சொல்லில் அறிவிக்கின்ற நபி மொழி சான்றாகும். "(சுவனப் பெண்ணைப் பற்றி நபியவர்கள் குறிப்பிடும் போது) அதிகம் அன்பு வைக்கின்ற, அதிகம் பிள்ளை பெறுகின்ற, அவள் அநியாயம் செய்தால் அல்லது அநீதி இழைக்கப்பட்டால் எனது முன்நெற்றி மயிர் உன் கரத்தில் உள்ளது. நீர் என்னை பொருந்திக் கொள்ளும் வ்ரை எதனையும் சுவைக்கமாட்டேன் என்று கூறுவாள்." (தபரானி 19:140).

## 42- மக்களிடம் எதனையும் கேட்காமலிருப்பது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸவ்பான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மனிதர்களிடம் எதனையும் கேட்கமாட்டேன் என யார் என்னிடம் உத்தரவாதம் அளிக்கிறாரோ அவருக்கு சுவனம் கிடைக்க நான் உத்தரவாதமளிக்கிறேன்." அப்போது ஸவ்பான்

(றழி) அவர்கள் நான் எனக் கூறிவிட்டு, மக்களிடம் எதனையும் கேட்காமலிருந்தார்கள்.

மற்றொரு அறிவிப்பில்: ஸவ்பான் (றழி) அவர்கள் பயணிக்கும் போது அவரின் சாட்டை கீழே விழுந்தால் அதனை எடுத்துத் தருமாறு யாரிடமும் கேட்காமல் அவரே இறங்கி அதனை எடுத்துக் கொள்வார்கள் என்று வந்துள்ளது. (அஹ்மத், இப்னுமாஜா).

43-அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாகவும் பொருந்திக் கொள்வது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஸஈத் அல் குத்ரிய்யி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “அபூ ஸஈதே! யார் அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மதை நபியாகவும் பொருந்திக்கொள்கிறாரோ அவருக்கு சுவனம் நிச்சயமாகி விட்டது.” (முஸ்லிம் 3:1501).

மற்றொரு சொல்லில் இவ்வாறு வந்துள்ளது: யார் “றழீது பில்லாஹி றப்பன் வபில் இஸ்லாமி தீனன் வபிமுஹம்மதின் ரஸூலன்” பொருள்: அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மதை நபியாகவும் நான் பொருந்திக் கொள்கிறேன் என யார் கூறுகிறாரோ

அவருக்கு சுவனம் நிச்சயமாகி விட்டது." (ஸுனன் அபீதாவூத் 2:183).

**44- இறை கூலியை எதிர்பார்த்து அதான் கூறுபவரும், 12 வருடங்கள் அதான் கூறியவரும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல் அஷ்அரீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக அல்லாஹ் மறுமையில் நாட்களை அதன் தோற்றத்தில் எழுப்புவான். வெள்ளிக் கிழமையை பிரகாசம் மிக்கதாக எழுப்புவான். மணவாளனுக்கு மணமகளை வழங்கப்படுவது போன்று வெள்ளிக்கிழமையுடையவர்கள் அதனை சூழ்ந்திருப்பார்கள். அவர்களுக்கு அது ஒளியூட்டிக் கொண்டிருக்கும். அதில் அவர்கள் நடப்பார்கள். அவர்களின் நிறம் பனிக் கட்டியைப் போன்று வெண்மையாக இருக்கும். கஸ்தூரியைப் போன்று அவர்களிடம் நறுமனம் வீசிக் கொண்டிருக்கும். அவர்கள் கற்பூர மலையில் உலாவிக் கொண்டிருப்பார்கள். மனிதர்களும், ஜின்களும் அவர்களை பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் சுவனம் நுழையும் வரை ஆச்சரியப்படமாட்டார்கள். இறை கூலியை எதிர்பார்த்து அதான் கூறிய முஅத்தின்களைத் தவிர வேறு யாரும் அவர்களுடன் கலந்திருக்க மாட்டார்கள்." (இப்னு குதைமா 3:117).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் 12 வருடங்கள் அதான் கூறுகிறாரோ அவருக்கு சுவனம் நிச்சயமாகி விட்டது. ஒவ்வொரு நாளும் அவரின் அதானுக்கு அறுபது நன்மைகளும், ஒவ்வொரு இகாமத்துக்கு முப்பது நன்மைகளும் எழுதப்படும்." (இப்னுமாஜா 1:241).

## 45- பால் சுரக்கும் பிராணியை பிறருக்கு இரவலாகக் கொடுத்தல்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நான்கு பண்புகள் உள்ளன. அவைகளில் உயர்ந்தது பால் சுரக்கும் பிராணியை பிறருக்கு இரவல் கொடுப்பதாகும். யார் அச்செயல்களில் ஒன்றை அதன் கூலியை எதிர்பார்த்தும், உண்மைப்படுத்தியும் செய்கிறாரோ அவரை அல்லாஹ் சுவனத்தில் நுழைவிப்பான்."

ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஒருவரான ஹஸ்ஸான் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஸலாமுக்கு பதில் கூறல், தும்மியவர் அல்ஹம்துலில்லாஹ் என்றால் கேட்பவர் யர்ஹமுகல்லாஹ் என்று கூறல், பாதை போன்ற இடங்களில் மக்களுக்கு தொல்லை கொடுக்கும் பொருட்களை அகற்றுதல், போன்ற

இந்நபி மொழியில் கூறப்படாத பல நற்பண்புகளைக் கடைபிடிக்க முற்பட்டோம். பதினைந்து பண்புகளை எங்களால் அடைய முடியாமல் போனது.

ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்பி மொழியில் வந்துள்ள "அல் மனீஹா" என்பதன் அடிப்படைக் கருத்து கொடை யாகும். அபூ உபைத் கூறுகிறார்: "அல் மனீஹா" என்ற சொல் அறபிகளிடம் இரு கருத்தில் உபயோ கிக்கப்படுகிறது. ஒன்று - ஒருவர் தனது தோழருக்கு சொந்தமாக (பால் சுரக்கும்) ஆட்டைக் கொடுப்பது. மற்றது: அவருக்கு பால் எடுத்து பயன்பெறுவதற்காக ஒரு ஒட்டகத்தை அல்லது ஆட்டை சில காலம் கொடுத்து விட்டு, மீட்டி எடுப்பது. இங்கே நாட்டம் என்னவெனில் பாலுள்ள மிருகங்களை பிறருக்கு இரவலாகக் கொடுப்பதாகும். அவர் அவைகளின் பாலைக் கறந்து விட்டு திருப்பிக் கொடுப்பார். (பத்ஹுல்பாரி 5:243).

## 46- அநீதியாக தனது செல்வத்துக்காக கொலை செய்யப்பட்டவர்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் தனது செல்வத்துக்காக அநீதியாக கொலை செய்யப்படுகி றாரோ அவருக்கு சுவனம் உண்டு."( நஸயி 7:115).

இந்நபி மொழியின் அடிப்படை புகாரி – முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் இவ்வாறு பதிவாகியுள்ளது: "யார் தனது செல்வத்துக்காக கொலை செய்யப்படுகிறாரோ அவர் ஷஹீத் ஆவார்." (புகாரி 5:123 முஸ்லிம் 1:124).

**47- (பிள்ளைப் பேற்றின் பின்) நிபாஸ் காரணமாக மரணிக்கும் பெண்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக றாஷித் பின் ஹுபைஷ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " இறை பாதையில் கொலை செய்யப்படுபவர் ஷஹீத் ஆவார். தொற்று நோயில் மரணிப்பவர் ஷஹீதாவார். வயிற்றுப் போக்கில் மரணிப்பவர் ஷஹீதாவார். (பிள்ளைப் பேற்றின் பின் வெளிப்படும்) நிபாஸ் காரணமாக மரணிக்கும் பெண்ணை அவளின் குழந்தை சுவனத்துக்கு இழுத்துச் செல்லும். அபூல் அவ்வாம் அவர்கள் மேலும் இரண்டைக் குறிப்பிட்டுள்ளார்கள்: "நெருப்பில் எறிந்து மரணிப்பவரும், வெள்ளத்தில் மூல்கி மரணிப்பவரும் ஷஹீதாவார்கள்" (அஹ்மத் 3:489).

**48- ஒருவர் தனது பிறப்பிடமல்லாத மற்றொரு இடத்தில் மரணித்தல்.**

அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மதீனாவில் ஒருவர் மரணித்த போது அவர் மீது நபியவர்கள் தொழுகை நடாத்தி விட்டு, இவர் தனது பிறப்பிடமல்லாத வேறொரு இடத்தில் அல்லவா மரணித்திருக்கிறார் என்று கேட்டார்கள். அப்போது மக்களில் ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! ஏன் அவ்வாறு கூறினீர்கள் என்று கேட்டார். அதற்கு நபியவர்கள்: ஒருவர் தனது பிறப்பிடமல்லாத மற்றொரு இடத்தில் மரணித்தால் அவர் பிறந்த இடத்துக்கும், மரணித்த இடத்துக்குமிடையில் அளக்கப்பட்டு, சுவனத்தில் அது போன்றளவு தூரம் அவருக்கு வழங்கப்படும் என்று கூறினார்கள்." (அஹ்மத்2:177 நஸாஈ 4:7).

### 49- மூன்று ஸப்புகள் நின்று ஜனாஸாத் தொழுகை நடாத்தப்பட்ட ஒருவர்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக மாலிக் பின் ஹுபைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எந்த ஒரு முஸ்லிம் மரணித்து, அவர் மீது முஸ்லிம்களில் மூன்று ஸப்புகள் நின்று ஜனாஸாத் தொழுதால் அவருக்கு சுவனத்தை நிச்சயப்படுத்தி விடுகிறது.

ஹதீஸ் அறிவிப்பாளரான மாலிக் கூறுகின்றார்: இந்நபி மொழியை செயல்படுத்துவதற்காக ஜனாஸா வின் உறவினர்கள் குறைவாக இருந்தால் அவர்க

ளை மூன்று ஸப்புகளாக தான் பிரிப்பதாகக் கூறுகின்றார்கள். (அபூதாவூத் 3:514).

திர்மிதி கூறுகின்றார்: இத்தலைப்பில் ஆஇஷா, உம்மு ஹபீபா, அபூ ஹுரைரா (றழி) ஆகியோரும் ஹதீஸ்களை அறிவித்துள்ளனர்.

## 50- சோதனை ஏற்பட்டவருக்கு ஆறுதல் கூறுதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அம்ர் பின் ஹஸ்ம் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எந்த ஒரு இறை விசுவாசி சோதனையிலுள்ள தனது சகோதரனுக்கு ஆறுதல் கூறுகின்றாரோ அவருக்கு மறுமையில் கண்ணியமாக ஆடையை இறைவன் அணிவிப்பான்." (இப்னு மாஜா 1:511).

## 51- ஸலாமைப் பறப்புதல், உணவூட்டுதல், இரத்த பந்துக்களுடன் சேர்ந்து வாழல், மென்மையாகப் பேசுதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "எனது ஆத்மா எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக நீங்கள் விசுவாசங் கொள்ளும் வரை சுவனம் நுழையமாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கு ஒருவர் நேசம் வைக்கும் வரை விசுவாசங் கொள்ள மாட்டீர்கள். நீங்கள் செய்தால் உங்களுக்கு மத்தியில் நேசத்

தை ஏற்படுத்தும் ஒரு செயலை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? என்று கேட்டு விட்டு, உங்களுக்கு மத்தியில் ஸலாமைப் பறப்புங்கள் என்று கூறினார்கள்." (முஸ்லிம் 1:74).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் ஸலாம் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மக்களே! நீங்கள் ஸலாமைப் பறப்புங்கள். உணவூட்டுங்கள். இரத்த பந்துக்களுடன் சேர்ந்து வாழுங்கள். மக்கள் தூங்கும் வேளை இரவில் எழுந்து தொழுங்கள். சாந்தியாக சுவனம் நுழைவீர்கள்." (திர்மிதி 4:562 இப்னுமாஜா 1:423).

இதற்கு அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்களின் ஹதீஸும் சான்றாகும். அதனை திர்மிதி மற்றும் இப்னு ஹிப்பான் ஆகியோர் ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர். (திர்மிதி 4:252 இப்னு ஹிப்பான் 356).

மேலும் அபூ ஹுரைரா (றழி) அவர்களின் ஹதீஸும் இதற்குச் சான்றாகும். அதனை இப்னு ஹிப்பான், ஹாகிம் ஆகியோர் ஸஹீஹ் எனக் கூறியுள்ளனர். தஹபி இமாம் அவர்கள் சரியென அதனை அங்கீகரித்துள்ளார்கள். (இப்னு ஹிப்பான் (அல் இஹ்ஸான்) 1:363 ஹாகிம் 4:160).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மாலிக் அல் அஷ்அரீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக சுவனத்

தில் சில அறைகள் உண்டு. அதன் வெளிப்பகுதி உள்ளால் தெரியும். அதன் உள் பகுதி வெளியால் தெரியும். உணவூட்டியோருக்கும், நளினமாகப் பேசியோருக்கும், தொடராக நோன்பு நோற்றோருக்கும், மக்கள் தூங்கும் வேளை இரவில் எழுந்து தொழுதோருக்கும் அதனை ஏற்பாடு செய்துள்ளான்." (அஹ்மத் 5:343).

ஷரீஹ் பின் ஹானிஃ அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அவர்களின் தந்தை நபியவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே சுவனத்தை அவசியப்படுத்தும் ஒரு செயலை எனக்குக் கூறுங்கள் என்று கேட்ட போது, நீர் நல்லதைப் பேசுவீராக. மேலும் ஸலாமைப் பரப்புவீராக என நபியவர்கள் கூறினார்கள்." (இப்னு ஹிப்பான் 1:356).

இந்நபி மொழிகளில் சிலவற்றில் இராத் தொழுகை, நோன்பு பற்றியும் வந்துள்ளது. இந்நூலில் அவையிரண்டின் இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 52- ஸப்பில் உள்ள இடை வெளியை நிறப்புதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் ஸப்பில் உள்ள ஓர் இடை வெளியை நிறப்புகிறாரோ அதன் மூலம் அல்லாஹ் அவரின் ஓர் அந்தஸ்தை உயர்த்தி, அவருக்கு

சுவனத்தில் ஒரு வீட்டைக் கட்டுவான்." (தபரானி 2:91).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜுஹைபா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் ஸப்பில் உள்ள ஓர் இடை வெளியை நிறப்புகிறாரோ அவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன." (பஸ்ஸார் 1:248).

## 53- பலவீனமானவர், மிக பலவீனமானவர், வறியவர், ஏழை

ஹாரிஸா பின் வஹப் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: "உங்களுக்கு சுவனவாசிகள் யாரென அறிவிக்கட்டுமா? என நபியவர்கள் கேட்டு விட்டு, பலவீனமான, மிக பலவீனமான ஒவ்வொருமாவர். அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தால் அதனை நிறைவேற்றுவார். உங்களுக்கு நரகவாசிகள் யார் என அறிவிக்கட்டுமா? கடும் சித்தமுடையவர்கள், பெருமையாளர்கள் ஒவ்வொருவருமாவர் என நபியவர்கள் கூறினார்கள்."

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சுவனமும். நரகமும் வாதம் புரிந்தன: அடக்கியாள்பவர்கள், பெருமையாளர்கள் என்னிடம் தான் நுழைவார்கள் என நரகம்

கூறியது. பலவீனமானோர், ஏழைகள் என்னிடம் நுழைவார்கள் என சுவனம் கூறியது. அப்போது அல்லாஹ் நரகத்தைப் பார்த்து, நீயே என் வேதனைக்குரிய இடம். உன் மூலம் நான் நாடியோரை வேதனை செய்வேன் என்று கூறினான். சுவனத்தைப் பார்த்து, நீ என் அருளுக்குரிய இடம். உன் மூலம் நான் நாடியோருக்கு அருள்பாளிப்பேன். உங்களில் ஒவ்வொருவரையும் நிறப்புவேன் என இறைவன் கூறினான்." (புகாரி 8:595 முஸ்லிம் 4:2186).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உஸாமா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நான் சுவன வாயிலில் நின்றேன். அதில் நுழைந்தவர்களில் அதிகமானோர் ஏழைகளாக இருந்தார்கள். நரக வாயிலில் நின்றேன். அதில் நுழைந்தோரில் அதிகமானோர் பெண்களாக இருப்பதைக் கண்டேன்." (புகாரி 5196 முஸ்லிம் 2736).

இம்ரான் (றழி) அவர்கள் மற்றொரு சொல்லில் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: "நான் சுவனத்தைப் பார்த்தேன். அதில் அதிகமாக ஏழைகள் இருப்பதைக் கண்டேன். நரகத்தைப் பார்த்தேன். அதில் அதிகமாக பெண்கள் இருப்பதைக் கண்டேன்." (புகாரி 4:117 நஸயி 5:232).

## 54- பெருமை, குரோதம், கடன் ஆகியவைகளிலிருந்து தூய்மை பெறல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஸவ்பான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் பெருமை, குரோதம், கடன் ஆகியவைகளிலிருந்து தூய்மையடைந்தவராக மரணிக்கிறாரோ அவர் சுவனம் நுழைவார்." (திர்மிதி 4:117 நஸயி 5:232).

## 55- நாணம்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நாணம் ஈமானில் உள்ளதாகும். ஈமான் சுவனத்தில் நுழைவிக்கும். தீய வார்த்தை நன்மையை புறக்கனிப்பதில் உள்ளதாகும். புறக்கனிப்பு நரகத்தில் நுழைவிக்கும்" (திர்மிதி 4:321 அஹ்மத் 2:501).

மற்றொரு நபி மொழி இதனை இவ்வாறு தெளிவுபடுத்துகிறது: "மனிதர்கள் தமது நாவுகளால் செய்த தீமைகளாலே தவிர வேறு எதனாலும் நரகத்தில் முகம் குப்புர விழுவார்களா?" என நபியவர்கள் கேட்டார்கள். (தைழுல் கதீர் 3:427).

**56- கொடுக்கல் வாங்களிலும், தீர்ப்பு சொல்வதிலும், தீர்ப்பு கேட்பதிலும் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ளல்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உஸ்மான் பின் அப்பான் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "வாங்குவதிலும், விற்பனை செய்வதிலும், தீர்ப்பு சொல்வதிலும், தீர்ப்பு கேட்பதிலும் தாராள மனதுடன் நடந்து கொண்ட மனிதனை அல்லாஹ் சுவனத்தில் நுழைவித்தான்." (அஹ்மத் 1:58).

அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்களின் நபி மொழியும் இதற்குச் சான்றாகும். " தீர்ப்பு சொல்வதிலும், தீர்ப்புக் கேட்பதிலும் தாராள மனதுடன் நடந்து கொண்ட மனிதன் சுவனத்தில் நுழைந்து விட்டான்." (அஹ்மத் 2:210 நஸயீ 7:318).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்தில்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "விற்பனை செய்தால், வாங்கினால், தீர்ப்புக் கேட்டால் தாராள மனதுடன் நடந்து கொண்ட மனிதனுக்கு அல்லாஹ் கருணை காட்டுவானாக." (புகாரி 4:306).

ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: கொடுக்கல் வாங்களில் தாராள மனதுடன் நடந்து கொள்ளுமாறும், உலோபித்தனத்தை விட்டு விட்டு, உயர் பண்புகளைக் கடைபிடிக்குமாறும் இந்நபி மொழி தூண்டுகிறது.

மேலும் தன் உரிமையை வேண்டுவதில் மக்களுக்கு நெருக்கடி கொடுக்காமல் அவர்களை மன்னித்து விடுமாறும் தூண்டுகிறது. (பத்ஹுல்பாரி 4:307).

## 57- ஜமாஅத்தோடு சேர்ந்திருத்தல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: " நீங்கள் கூட்டாக இருங்கள். பிரிந்திருப்பதை விட்டும் உங்களை நான் எச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் தனித்த ஒருவருடன் இருப்பதுடன் இருவரை விட்டும் தூரமாக இருக்கிறான். யார் சுவனத்தின் மத்திய பகுதியை விரும்புகிறாரோ அவர் ஜமாஅத்துடன் சேர்ந்து இருக்கட்டும்." (திர்மிதி 4:404).

திர்மிதி அவர்கள் கூறுகின்றார்கள்: அறிஞர்களிடம் ஜமாஅத் என்றால் மார்க்க சட்டதிட்டங்கள், ஹதீஸ் கலை பற்றி நன்கறிந்த அறிஞர் குழுவாகும்.

## 58- நேர்மையான அரசன், மென்மை உள்ளம் கொண்ட கருணையுள்ள மனிதன், தடுக்கப்பட்டதை விட்டும் தவிர்ந்து, பிறரிடம் பிச்சை கேட்காமல் வாழ்கின்ற குடும்பத் தலைவன்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இயாழ் பின் ஹமார் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "சுவனவாசிகள் மூன்று பேர்களாவர்: "நேர்மையுள்ள, கொடை

கொடுக்கின்ற, இறை அருளுக்குரிய அரசன். உறவினர் ஒவ்வொருவருடனும், முஸ்லிம்களுடனும் மென்மையாக நடந்து கொள்ளும் அன்புள்ளம் கொண்ட மனிதன். தடுக்கப்பட்டதை விட்டும் தவிர்ந்து, பிறரிடம் கையேந்தாமல் வாழ்கின்ற குடும்பக்காரன் ஆகியோர்களாவர்." (முஸ்லிம் 4:2198).

**59-தான் செல்வதை விரும்புகின்ற மனிதர்களிடம் செல்வது.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் அம்ர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "யார் நரகத்தை விட்டும் தூரமாக்கப்பட்டு, சுவனத்தில் நுழைவிக்க விரும்புகிறாரோ அவர் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பியிருக்கும் போது அவருக்கு மரணம் ஏற்படட்டும். மேலும் அவர் தான் செல்வதை விரும்புகின்ற மக்களிடம் செல்லட்டும்." (முஸ்லிம் 3:1473).

நவவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இது நபியவர்களின் இரத்தினச் சுருக்கமான வார்த்தைகளில் உள்ளதாகும். இது முக்கியமானதொரு அடிப்படையாக இருப்பதால் இதில் கவனமெடுப்பது

அவசியமாகும். மேலும் மக்கள் செய்வதற்கு விரும்பு கின்றவற்றையே அவர்களுக்குச் செய்ய வேண்டும். (ஷரகு ஸஹீஹ் முஸ்லிம் 1194).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்:"தான் விரும்புவதை தன் சகோதரனுக்கும் விரும்பும் வரை உங்களில் எவரும் விசுவாசியாக மாட்டார்." (புகாரி 13 முஸ்லிம்45).

## 60- சத்தியத்தைக் கொண்டு தீர்ப்புக் கூறும் தீர்ப்பாளர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக புரைதா (றழி) அவர்கள் அறிவிக் கின்றார்கள்: "தீர்ப்பாளர்கள் மூன்று பேர்கள். ஒருவர் சுவனத்தில் இருப்பார். இருவர் நரகத்தில் இருப்பார்கள். சுவனத்தில் இருப்பவர் சத்தியத்தை அறிந்து அதன் படி தீர்ப்பு வழங்கியராவார். நரகத்தில் இருப்பவர்களில் ஒருவர் சத்தியத்தை அறிந்து அநீதமாக தீர்ப்பு வழங்கியவர். அவர் நரக்தில் இருப்பார். மற்றவர் அறியாமல் மக்களுக்கு தீர்ப்பு வழங்கியவர். அவரும் நரகத்தில் இருப்பார்." (அபூதாவூத் 4:5 திர்மிதி 3:613 நஸயி 3:461 இப்னுமாஜா 2:776).

**61- பிறரிடம் மந்திரிக்கும் படி கேட்காதவர்களும், சகுணம் பார்க்காதவர்களும், நெருப்பால் சுட்டு வைத்தியம் செய்யுமாறு பிறரிடம் கேட்காதோரும், தமது இறைவனிடம் மாத்திரம் நம்பிக்கை வைப்பவர்களும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இம்ரான் பின் ஹுஸைனை (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:"எனது சமுதாயத்தில் எழுபதாயிரம் பேர்கள் கேள்விகனக்கின்றி சுவனம் நுழைவார்கள் என நபியவர்கள் கூறிய போது அல்லாஹ்வின் தூதரே அவர்கள் யார் என நபித்தோழர்கள் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள்: அவர்கள்தான் பிறரிடம் மந்திரிக்கும் படி கேட்காதவர்களும், சகுணம் பார்க்காதவர்களும், நெருப்பால் சுட்டு வைத்தியம் செய்யுமாறு பிறரிடம் கேட்காதோரும், தமது இறைவனிடம் மாத்திரம் நம்பிக்கை வைப்பவர்களுமாவார்கள் எனக் கூறினார்கள்." (முஸ்லிம் 1:198).

இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: எழுபதுநாயிரம் பேர்களை சம்பூரணமாக தவக்குல் (நம்பிக்கை) வைப்பவர்கள் என வரணிக்கப்பட்டதனால் நாடப்படுவது என்னவெனில் அவர்கள் பிறரிடம் மந்திருக்கும் படியும், நெருப்பால் சுட்டு வைத்தியம் செய்யும் படியும் வேண்டவோ, சகுணம் பார்க்கவோர மாட்டார்கள்." என்பதாகும். (தைஸீருல் அஸீஸுல் ஹமீத் பீ ஷரஹி கிதாபித் தவ்ஹீத்).

ஸுலைமான் பின் அப்தில்லாஹ் பின் அஷ்ஷெய்க் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் அவர்கள் கூறுகின்றார்கள்: அதாவது இறைவன் தீர்ப்புக்கு அடிபணிந்து, அவனின் சோதனையில் இன்பம் அடைந்து பிறரிடம் மந்திரிக்குமாறு கேட்காதது போன்று பிறரிடம் நெருப்பினால் சுட்டு வைத்தியம் செய்யுமாறு கேட்கவும் மாட்டார்கள். ஆனால் தானாக சுட்டு வைத்தியம் செய்வது ஆகுமானதாகும். ஸஹீஹான ஹதீஸில் இது ஆகுமானது என்று வந்துள்ளது. ஜாபிர் பின் அப்தில்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபியவர்கள் உபையிப்னு கஃப் அவர்களிடம் ஒரு வைத்தியரை அனுப்பினார்கள். அவர் ஒரு மரக் கொத்தை வெட்டி, அதனை சூடாக்கி வைத்தியம் செய்தார்கள்." (புகாரி 10:172).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிருடனிருக்கும் போது விலாவில் ஏற்பட்ட வருத்தத்திற்காக நெருப்பால் சுட்டு வைத்தியம் செய்ததாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அஸ்அத் பின் ஸராரா அவர்களின் உடம்பில் ஏற்பட்ட சிவப்பு பொறிகளுக்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நெருப்பால் சுட்டு வைத்தியம் செய்ததாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (திர்மிதி 4:341). நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

கூறியதாக இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "மூன்றில் நிவாரணி உள்ளது: தேன் அருந்துதல், இரத்தம் குத்தி எடுத்தல், நெருப்பால் சுடல். நெருப்பால் சுடுவதை விட்டும் உங்களை நான் தடை செய்கிறேன்." மற்றொரு சொல்லில் இவ்வாறு வந்துள்ளது: "நெருப்பால் சுட்டு வைத்தியம் செய்வதை நான் விரும்பவில்லை." (புகாரி 10:154).

அஷ்ஷெய்க் ஸுலைமான் பின் அப்தில்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: "சகுணம் பார்க்க மாட்டார்கள்" என்றால் பறவை போன்றவற்றைக் கொண்டு சகுணம் பார்க்கமாட்டார்கள். பின்னர் மற்றொரு இடத்தில் சகுணம் என்றால் என்னவென்பதை பிரிதொரு இடத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதாவது அது அவர்களின் நடவடிக்கைளை தடுக்கக் கூடியதாக இருந்தது. ஏதாவதொன்றை அவர்கள் செய்ய நாடினால் பறவையைப் பறக்க விட்டு அது வலப்பக்கமாகப் பறந்தால் அதனை நல்லதாகக் கருதுவார்கள். அது இடது பக்கமாகப் பறந்தால் அதனை துட்சகுணமாகக் கருதுவார்கள். எனவே அவ்வாறு இல்லை என்பதை இஸ்லாம் கூறி, அதனைத் தவறாகக் கருதி, அதனை விட்டும் தடை செய்ததுடன் நலவை ஏற்படுத்துவதற்கும், தீமையைத் தடுப்பதற்கும் அதற்கு எவ்வித தாக்கமும் இல்லை என்று கூறியது. (தைஸீருல் அஸீஸுல் ஹமீத் 86).

“தமது இறைவன் மீது மாத்திரம் நம்பிக்கை வைப்பார்கள்” என்ற வார்த்தை பல அம்சங்களை உள்ளடக்குகின்ற ஓர் அடிப்படையாகும். அதிலிருந்து தான் இச்செயல்கள் அனைத்தும் பிரிந்துள்ளன. அவ்வடிப்படை தான், அல்லாஹ்வின் மீது மாத்திரம் (தவக்குல்) நம்பிக்கை வைப்பதும், உண்மையாக அவன் பக்கம் மீள்வதும், உள்ளத்தால் அவன் மீது உறுதி கொள்வதுமாகும்.

பின்பு கூறுகின்றார்: சில அறிவீனர்கள் நினைப்பது போன்று அவர்கள் எவ்வித செயல்களையும் செய்ய மாட்டார்கள் என்ற கருத்தை இந்நபி மொழி அறிவிக்கவில்லை என்பதை அறிந்து கொள்வாயாக. ஏனெனில் மொத்தத்தில் தேவையான முயற்சி களைச் செய்வது இயற்கையானதும், அத்தியவசிய மான ஒன்றாகும். மிருகங்கள் உட்பட எவரும் இதனை விட்டுவிட முடியாது. மட்டுமல்ல தவக்குல் என்றாலே மிகப் பெரிய முயற்சியைச் செய்வதாகும். அல்லாஹ் திருமறையில் குறிப்பிடுவது போன்று: “எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிறாரோ, அவருக்கு அவன் போதுமானவன் ” (65:3).

இங்கே நாட்டம் என்னவெனில் அவர்கள் அல்லாஹ்வின் மீது வைத்துள்ள தவக்குலினால் மந்திரிக்க வேண்டுதல், சுட்டு வைத்தியம் செய்யுமாறு வேண்டுதல் போன்ற மக்ரூஹான அம்சங்களை தமக்கு அதன் பால் தேவையிருந்தும் விட்டு

விடுகின்றனர். எனவே அவர்கள் அதனைச் செய்யாது விட்டது அது நிவாரனம் என்பதற்காக அல்ல. எனினும் மக்ருஹ் என்ற காரணத்துக்காக அதனை விட்டார்கள். குறிப்பாக நோயாளி தனக்கு எதில் நிவாரணம் கிடைக்கின்றதோ அதனைச் செய்து விடுகிறார். மக்ருஹ் அல்லாத விதத்தில் வைத்தியம் செய்வது தவக்குலில் குறையில்லை. எனவே வைத்தியம் செய்யாமலிருக்கக் கூடாது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "அல்லாஹ் நிவாரனியில்லாத எந்த ஒரு நோயையும் இறக்கி வைக்கவில்லை." (புகாரி 10:134). (தைஸீருல் அஸீஸில் ஹமீத் 86).

## 62- இறை திருப்தியுள்ள வார்த்தை

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நிச்சயமாக ஓர் அடியான் அல்லாஹ்வின் பொருத்தத்துக்குரிய ஒரு வார்த்தையை அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பேசுவார். அதன் மூலம் அல்லாஹ் அவரின் அந்தஸ்துகளை உயர்த்துவான். மேலும் ஓர் அடியான் அல்லாஹ்வின் கோபத்துக்குரிய ஒரு வார்த்தையை அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல்

பேசுவார். அதனால் அவர் நரகத்தில் நுழைவார்.” (புகாரி 11:308).

**63- பெறுமதியுள்ள ஆடையை அணிய வசதியிருந்தும் அல்லாஹ்வுக்குப் பணிந்து அதனை அணியாதிருப்பது.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக முஆத் பின் அனஸ் அல் ஜுஹனீ (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “யார் (பெறுமதிமிக்க) ஆடையை அணிய முடிந்தும் அல்லாஹ்வுக்குப் பணிந்து அணியாது விட்டுவிடுகிறாரோ அவரை அல்லாஹ் மறுமையில் படைப்புகளின் முன்னிலையில் அழைத்து, இறை விசுவாசிகளுக்கு வழங்கப்படும் ஆடைகளில் அவர் விரும்பியதைத் தெரிவு செய்யுமாறு கூறுவான்.” (திர்மிதி 4:561).

முபாரக்பூரி அவர்கள் கூறுகின்றார்கள்: “ஆடை அணியாது விட்டு விடுவது” என்றால் அழகான விலைமதிப்பபுள்ள ஆடையை அணியாதிருப்பதாகும். “அல்லாஹ்வுக்கு அடி பணிந்து” என்றால் அவர் பணிவாளர், துறவி என்று கூறப்படுவதற்காக அல்ல.

**64-அண்டை வீட்டாருக்கு தொல்லை கொடுக்காதிருத் தல்.**

அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “ஒரு மனிதர் நபியவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே நிச்சயமாக ஒரு பெண் அதிகமாகத் தொழுவதாகவும், நோன்பு நோற்பதாகவும், தர்மம்

செய்வதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அவள் தனது அண்டை வீட்டாருக்கு தனது நாவால் தொல்லை கொடுக்கிறாள் எனக் கூறிய போது அவள் நரகத்தில் இருப்பாள் என நபியவர்கள் கூறினார்கள். மற்றொரு பெண் சொற்பமாக நோன்பு நோற்பதாகவும், தர்மம் செய்வதாகவும், தொழுவ தாகவும் கூறப்படுகின்றது. அவள் காய்ந்த பால் கட்டிகளை தர்மமாகக் கொடுக்கிறாள். அவள் தனது நாவால் அவளின் அண்டை வீட்டாருக்கு தொல்லை கொடுப்பதும் இல்லை எனக் கூறிய போது, அவள் சுவனத்தில் இருப்பாள் என நபியவர் கள் கூறினார்கள். ” (அஹ்மத் 2:440).

65- மையித்தைக் கபனிடல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் கள் கூறியதாக ராபிஃ (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: “யார் ஒரு மையித்தை குளிப்பாட்டி, அதில் உள்ள குறைகளை மறைக்கிறாரோ நாற்பது முறை அவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. யார் அதனைக் கபன் செய்கிறாரோ மறுமையில் அவருக்கு ஸுன்துஸ், இஸ்தப்ரக் (ஆகிய பட்டா டைகள்) அணிவிக்கப்படும். யார் ஒரு மையித்திற்கு கப்ர் தோண்டி அதில் அதனை அடக்கம் செய்கிறா ரோ அவருக்கு மறுமை வரை அவரை தங்க வைத்த வீட்டின் கூலியளவு கூலி கொடுக்கப்படும்.” (முஸ்தத்ரக் 1:354).

அபூ உமாமா (றழி) அவர்கள் மற்றொரு சொல் லில் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: "யார் ஒரு மையித்தைக் குளிப்பாட்டி, அதிலுள்ள குறைகளை மறைக்கிறாரோ அவரின் பாவங்களை அல்லாஹ் மறைத்து விடுவான். யார் அதனைக் கபன் செய்கி றாரோ அவருக்கு அல்லாஹ் பட்டாடை அணிவிப் பான்." (தபரானி 8:337).

## 66- குறிப்பிட்ட சில பண்புகளைச் செய்தல்

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்கள் கூறியதாக உப்பாதா பின் ஸாமித் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஆறு அம்சங் களைச் செய்வதாக எனக்கு நீங்கள் உத்தரவாதம் அளியுங்கள். நான் உங்களுக்கு சுவனத்தை உத்தரவாதமளிக்கிறேன். அவை: பேசினால் உண்மை பேசுங்கள். வாக்களித்தால் அதனை நிறைவேற்றுங்கள். அமானிதம் ஒப்படைக்கப்பட்டால் அதனைப் பாதுகாத்துக் கொடுங்கள். உங்கள் அபங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் பார்வைகளை தாழ்த்திக் கொள்ளுங்கள். உங்கள் கரங்களை (தீமையை விட்டும்) தடுத்துக் கொள்ளுங்கள்." (அஹ்மத்5:323 இப்னு ஹிப்பான் 1:245).

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "இன்று உங்களில்

நோன்பு நோற்றவர் யார் என நபியவர்கள் கேட்ட போது நான் என அபூ பக்ர் (றழி) அவர்கள் கூறினார்கள். உங்களில் இன்று ஜனாஸாவைத் துயர்ந்தவர் யார் என நபியவர்கள் கேட்ட போது நான் என அபூ பக்ர் (றழி) அவர்கள் கூறினார்கள். இன்று உங்களில் ஏழைக்கு உணவளித்தவர் யார் என நபியவர்கள் கேட்ட போது நான் என அபூ பக்ர் (றழி) அவர்கள் கூறினார்கள். இன்று உங்களில் நோயாளியைத் தரிசித்தவர் யார் என நபியவர்கள் கேட்ட போது நான் என அபூ பக்ர் (றழி) அவர்கள் கூறினார்கள். அப்பபோது நபியவர் கள் இவைகள் அனைத்தும் ஒருவரிடம் ஒன்று சேர்ந்து விட்டால் அவர் சுவனம் நுழைவார் என்று கூறினார்கள்." முஸ்லிம் 2:713)).

தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டதாக அபூ ஸஈத் அல்குத்ரிய்யி (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "ஐந்து நற்கருமங்கள் உள்ளன. யார் அவைகளை ஒரு நாளில் செய்கிறாரோ அல்லாஹ் அவரை சுவனவாசிகளில் ஒருவராக எழுதி விடுவான். அவை: யார் நோயாளியைத் தரிசித்து, ஜனாஸா வுக்கு சமூமளித்து, நோன்பு நோற்று, ஜும்ஆத் தினத்தில் பள்ளிக்குச் சென்று, ஓர் அடிமையை உரிமையிடுகிறாரோ அவர் (சுவனம் நுழைவார்)." (இப்னு ஹிப்பான் 4:191).

முஆத் பின் ஜபல் (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எமக்கு ஐந்து விடயத்தில் நல்லுபதேசம் செய்தார்கள். யார் அவைகளில் ஒன்றைச் செய்கி றாரோ அவர் அல்லாஹ்விடம் உத்தரவாதத்திற்குரி யவர். அவை: நோயாளியை நோய் விசாரிக்கச் செல்பவர் அல்லது ஜனாஸாவுடன் செல்பவர், அல்லது இறை பாதையில் யுத்தம் புரிய வெளியான வர், அல்லது தலைவருக்கு உதவுவதற்காக அவரி டம் செல்பவர்; அல்லது வீட்டில் அமர்ந்து கொள்ப வர். இதனால் மக்கள் அவரிடமிருந்து ஈடேற்றம் பெறுகின்றனர். அவரும் மக்களிலிருந்து ஈடேற்றம டைகிறார். மற்றொரு சொல்லில் இவ்வாறு வந்துள் ளது: எவரைப் பற்றியும் புறம் பேசாமல் வீட்டில் அமர்ந்தவர்." (அஹ்மத் 5:241 இப்னு குதைமா 2:375).

அபூ கஸீர் அஸ்ஸுஹைமீ அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு அடியான் செய்தால் சுவனத் தில் நுழைகின்ற ஒரு அமலை எனக்குக் கூறுமாறு நான் அபூ தர்ரிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் நான் இது பற்றி நபியவர்களிடம் கேட்ட போது இவ்வாறு என்று தெரிவித்தார்கள்: அல்லாஹ்வை விசுவாசிக்க வேண்டும் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே நிச்சயமாக ஈமானுடன் அமலும் உள்ளதல்லவா என நான் கேட்ட போது

அல்லாஹ் அவருக்கு கொடுத்த அருளிலிருந்து தர்மம் செய்ய வேண்டும் என்றார்கள். எதுவுமில்லாத ஏழையாக அவர் இருந்தால் என்ன செய்வதெனக் கேட்ட போது தனது நாவால் நல்லவற்றைக் கூறுவார் என்று கூறினார்கள். நாவன்மையற்ற கொன்னலுடையவராயிருந்தால் என்ன செய்வதெனக் கேட்ட போது ஒடுக்கப் பட்டவனுக்கு உதவி புரிவார் என்றார்கள். அதற்கு சக்தியற்ற பலவீனராக இருந்தால் என்ன செய்வ தென நான் கேட்ட போது அறிவற்ற ஒருவனுக்கு தொழில் செய்ய கற்றுக் கொடுப்பாராக என்று கூறினார்கள். அவர் அறிவற்ற ஒருவராக இருந்தால் என்ன செய்வதென்று நான் கேட்ட போது நபியவர்கள் என் பக்கம் திரும்பி நீர் உன் தோழருக்கு எந்த நன்மையும் செய்ய விரும்பவில் லை. அப்படியானால் அவர் மக்களுக்கு தொல்லை கொடுக்காமல் இருக்கட்டும் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே இது நிச்சயமாக இலகுபடுத் தும் ஒரு வார்த்தை என்று கூறினேன். அப்போது நபியவர்கள் எனது ஆத்மா எவன் கையில் உள்ள தோ அவன் மீது சத்தியமாக எந்த ஒரு அடியான் அல்லாஹ்வின் நற்கூலியை எதிர்பார்த்து இப்பண்புக ளில் ஒன்றைச் செய்கிறாரோ அவரை அப்பண்பு மறுமையில் அவரின் கையைப் பிடித்து, சுவனத்தில் நுழைவிக்கும் என்று கூறினார்கள்." (இப்னுஹிப் பான் 1:295 தபரானி 2:167).

பரா‡ பின் ஆஸிப் (றழி) அவர்கள் அறிவிக்கின் றார்கள்: அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு நாட்டுப் புற அறபி வந்து அல்லாஹ்வின் தூதரே என்னை சுவனத்தில் நுழைவிக்கும் ஒரு அமலை எனக்கு கற்றுத் தாருங்கள் என்று கூறினார். அதற்கு நபியவர்கள் நீர் பேச்சை சுருக்கி, விரிவான (விடையுடைய) வினாவைக் கேட்டு விட்டீர். உயிருள்ள ஒவ்வொன் றையும் உரிமையிடு. அடிமையை விடுதலை செய் என்றார்கள். அப்போது அம்மனிதர் அவையிரண்டும் ஒன்றாக இல்லையா எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் உயிருள்ள ஜீவராசியை உரிமையிடுவ தென்றால் அதனை உரிமையிடுவது மாத்திரமாகும். அடிமையை விடுதலை செய்வதென்றால் அதற்குரிய பெறுமதியைக் கொடுத்து விடுதலை செய்வதா த்தாகும். பாலில் மேலதிகமானவற்றைக் கொடையா கக் கொடு. உறவைத் துண்டித்து வாழும் இரத்த பந்துக்களுக்கு கருணை காட்டு. அதற்கு முடியாவிட்டால் பசித்தவனுக்கு உணவளிப்பீராக. தாகித்தவனுக்கு நீர் புகட்டுவீராக. நல்லதை ஏவி தீயதைத் தடுப்பீராக. அதற்கும் முடியாவிட்டால் நல்லவற்றைத் தவிர வேறு எதனையும் பேசாமல் உன் நாவைத் தடுத்துக் கொள்வீராக.”
(தயாலிஸி 100 அஹ்மத் 4:299).

# சுவனத்தை நிச்சயிக்கும் நல்லமல்கள்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | மூன்றாம் பதிப்பின் முன்னுரை | 1 |
| 2 | முன்னுரை | 3 |
| 3 | "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்ற கலிமாவை மொழிதல். | 8 |
| 4 | இறை விசுவாசமும், அதில் நிலையாய் இருப்பதும். | 12 |
| 5 | இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றுதல். | 13 |
| 6 | அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களை மனனமிடல். | 16 |
| 7 | அல்குர்ஆனை ஓதுவதும், அதன் படி செயல் படுவதும். | 17 |
| 8 | ஆயதுல் குர்ஸி | 20 |
| 9 | ஸூரது தபாரக் (முல்க்) | 20 |
| 10 | குல்ஹுவல்லாஹு அஹத் | 21 |
| 11 | அல்லாஹ்வை திக்ர் செய்தல் | 22 |
| 12 | ஓவ்வொரு தொழுகையின் பின்பும், தூங் கும் போதும் ஸுப்ஹானல்லாஹ், அல்ஹம்து--லில்லாஹ், அல்லாஹு அக்பர் ஆகியவைக ளைக் கூறல். | 24 |
| 13 | வுழூ செய்த பின் துஆ ஓதல் | 27 |
| 14 | "லாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்" என்று கூறல். | 27 |
| 15 | கடைத்தெருவுக்கு செல்லும் போது திக்ர் செய்தல் | 28 |
| 16 | தூங்கும் போது திக்ர் செய்தல். | 29 |
| 17 | அல்லாஹ்விடம் சுவனத்தை வேண்டுதல். | 30 |
| 18 | தவ்பா செய்தல் | 31 |
| 19 | ஸெய்யிதுல் இஸ்திஃபாரை ஓதல் | 31 |
| 20 | மார்க்க கல்வியைக் கற்றல். | 32 |
| 21 | பர்ழான, நபிலான தொழுகைகள். | 32 |
| 22 | ஐவேளைத் தொழுகை | 32 |
| 23 | பஜ்ர் தொழுகையும், அஸர் தொழுகையும். | 34 |
| 24 | நபிலான தொழுகைகள். | 34 |
| 25 | வுழூத் தொழுகை | 35 |

| | | |
|---|---|---|
| 26 | உள்ளச்சத்துடன் இரு ரக்அத்துகள் தொழுவது. | 36 |
| 27 | அல்லாஹ்வுக்கு அதிகம் ஸுஜுது செய்தல். | 36 |
| 28 | இராத் தொழுகை | 38 |
| 29 | பள்ளிக்கு அதிகம் செல்வது. | 38 |
| 30 | பள்ளிகளை அமைப்பது. | 40 |
| 31 | பாங்குக்கு பதில் கூறுவது. | 41 |
| 32 | நோன்பு நோற்றல். | 42 |
| 33 | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ். | 43 |
| 34 | ஜிஹாத் செய்தல். | 44 |
| 35 | இறைவன் பாதையில் செலவு செய்தல். | 45 |
| 36 | தானதர்மம் செய்தல். | 46 |
| 37 | வறியவருக்கு மனமிறங்குதல் | 47 |
| 38 | தொல்லை தருபவைகளை பாதையை விட்டும் அகற்றுதல். | 48 |
| 39 | மிருகங்களுக்கு நல்லறம் புரிதல் | 48 |
| 40 | அநாதையைப் பராமரித்தல். | 49 |
| 41 | பெண் பிள்ளைகளை வளர்த்தல். | 51 |
| 42 | நற்பண்பு. | 54 |
| 43 | தர்கிப்பதை விட்டுவிடல். | 55 |
| 44 | உண்மை கூறுவதும், பொய் கூறாமையும். | 55 |
| 45 | நாவையும், அபத்தையும் பாதுகாத்தல். | 56 |
| 46 | கோபத்தை அடக்குதல். | 57 |
| 47 | பொறாமை, குரோதமற்ற உள்ளம். | 58 |
| 48 | அழகிய புகழ் | 60 |
| 49 | பெற்றோர் நலம் பேணல். | 62 |
| 50 | பிள்ளை தந்தைக்கு பாவமன்னிப்பு கேட்டல். | 65 |
| 51 | நோயாளியைத் தரிசித்தல். | 65 |
| 52 | இஸ்லாமிய சகோதரர்களை தரிசித்தல். | 66 |
| 53 | நேசத்துக்குரியோரை இழந்ததில் பொறுமை செய்தல். | 67 |
| 54 | கஷ்டங்களில் பொறுமை செய்தல் | 72 |
| 55 | சோதனை வந்தவுடன் பொறுமை செய்தல் | 73 |
| 56 | கண்பார்வையை இழந்ததில் பொறுமை செய்தல் | 73 |
| 57 | மயங்கி விழுவதில் பொறுமை செய்தல். | 74 |
| 58 | மனைவி கனவனுக்கு கட்டுப்படல் | 75 |
| 59 | மக்களிடம் எதனையும் கேட்காதிருத்தல். | 76 |

| | | |
|---|---|---|
| 60 | அல்லாஹ்வை இறைவனாக பொருந்திக் கொள்ளல். | 77 |
| 61 | இறை கூலியை எதிர் பார்க்கும் முஅத்தினும், 12 வருடங்கள் அதான் கூறியவரும். | 78 |
| 62 | பாலுள்ள மிருகத்தை இரவலாகக் கொடுத்தல். | 79 |
| 63 | தன் செல்வத்தைப் பாதுகாப்பதில் அநீதியாக கொலை செய்யப்படல். | 80 |
| 64 | பிரசவ இரத்தம் வரும் காலத்தில் மரணித் தல். | 81 |
| 65 | ஒருவர் தனது பிறப்பிடமில்லாத இடத்தில் மரணித்தல். | 81 |
| 66 | மூன்று அணிகள் நின்று ஒருவர் மீது ஜனாஸாத் தொழுதல். | 82 |
| 67 | துன்பத்தில் உள்ளவனுக்கு ஆறுதல் கூறல். | 83 |
| 68 | ஸலாமைப் பறப்புவதும், உணவூட்டுவதும், இரத்த பந்துக்களுடன் சேர்ந்து வாழ்வதும்... | 83 |
| 69 | ஸப்பில் உள்ள இடை வெளியை நிறப்புதல். | 85 |
| 70 | பலவீனமானவர். | 86 |
| 71 | பொறுமை, மோசடி, கடன் ஆகியவைகளிலி ருந்து நிரபராதியாகுதல். | 87 |
| 72 | நாணம். | 87 |
| 73 | கொடுக்கல் வாங்களில், தீர்ப்பு கூறுவதில், தீர்ப்பு கேட்பதில் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ளல். | 88 |
| 74 | ஜமாஅத்துடன் சேர்ந்திருத்தல். | 90 |
| 75 | நேர்மயுள்ள அரசன், மென்மை உள்ளமுடை ய கருனைமிக்க மனிதன்... | 90 |
| 76 | தான் செல்வதை விரும்பும் மக்களிடம் செல்வது. | 91 |
| 77 | சத்தியத்தைக் கொண்டு தீர்ப்பு சொல்லும் தீர்ப்பாளர். | 92 |
| 78 | மந்திரிக்குமாறு வேண்டாதோரும், சகுணம் பார்க்காதோரும், நெருப்பால் சுட்டு வைத்தி யம் செய்யாதோரும், தமது இறைவனிடம்... | 93 |
| 79 | இறை திருப்தியுள்ள வார்த்தை. | 97 |
| 80 | விலை மதிப்புள்ள ஆடையை அணிய முடிந்தும் அணியாதிருத்தல். | 98 |

| | | |
|---|---|---|
| 81 | அண்டை வீட்டாருக்கு தொல்லை கொடுக்கா திருத்தல். | 98 |
| 82 | மையித்தைக் கபனிடல். | 99 |
| 83 | குறிப்பிட்ட சில நற்புண்புகளைச் செய்தல். | 100 |
| 84 | தலைப்புகள் அட்டவனை. | 105 |